# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:15 வள்ளுவர் ஆண்டு 2031 ஆனி 31 சனிக்கிழமை (15-07-2000) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:162


# புலிகளைப் பேச்சில் பங்குபற்ற பிரிட்டிஷ் தலைவர்கள் ஊடாக முயற்சி

## பூநகரியில் கரை ஒதுங்கிய சடலம்

வவுனியா,ஜுலை15

பூநகரி வடபிரதேச கடற்கரையில் உருக்குலைந்த நிலையில் பெண் ஒருவரின் சடலம் கரையொதுங்கியதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவித்தன.

கடந்த 12ஆம் திகதி கரையொதுங்கிய இந்தச் சடலத்தில் சிவப்பு நிறச் சட்டையும் மண்நிற பியாமாவும் காணப்பட்டதாகவும் சடலம் அந்த இடத்திலேயே அடக்கம் செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

பிரஸ்தாப பெண் தொடர்பான விவரங்களைப் பெறுவதற்காக மன்னார் பொலீஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (இ-9)

### உள்ளே

'லங்காதீப' சிங்களப் பத்திரிகையில் வெளிவந்த 'சிங்கள உறுமய'வின் கொள்கை விளக்கம் பற்றிய கட்டுரை ஆம் பக்கத்தில் பிரசுரமாகியுள்ளது. இதனைத் தமிழில் தந்தவர் கஜனி.

## அதன் ஓர் அங்கமே ராஜாங்க அமைச்சர் பீற்றர் வெஸ்ஸின் கொழும்பு விஜயம்

கொழும்பு,ஜுலை15

**இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் பொருட்டு தமிழீழ விடுதலைப் புலிகளை பேச்சுக்களில் பங்குபற்ற வைப்பதற்கு பிரிட்டிஷ் தலைவர்களின் உதவி நாடப்பட்டுள்ளது.**

**அதன் ஓர் அங்கமாகவே பிரிட்டனின் வெளியுறவு இராஜாங்க அமைச்சர் பீற்றர் வெஸ் மகொட் அவசர விஜயம் மேற்கொண்டு கொழும்பு வந்துள்ளார்.**

**தமிழ்த் தலைவர்கள் இருவர் அண்மையில் பிரிட்டனுக்குச் சென்று பிரிட்டிஷ் தலைவர்களைச் சந்தித்து, விடுதலைப் புலிகளை பேச்சுவார்த்தைக்குக் கொண்டுவருவதற்கு உதவுமாறு கேட்டிருந்தனர்.**

தமிழ்த் தலைவர்கள் இருவர் - நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருவர் - அண்மையில் பிரிட்டனுக்குச் சென்றிருந்தனர். அப்போது பிரிட்டிஷ் தலைவர்கள் பலரைச் சந்தித்து தமிழீழ விடுதலைப் புலிகளைப் பேச்சுவார்த்தை மேசைக்கு கொண்டுவருவதற்கு உதவுமாறு கேட்டனர்.

இவர்கள் இருவரினதும் இந்த முயற்சிக்கு அரசாங்கத்தின் ஆசீர

(12ஆம் பக்கம் பார்க்க)

## சிங்கர் கிண்ணம் இலங்கைக்கு

கொழும்பு,ஜுலை15

சிங்கர் கிண்ணத்துக்கான முத்தரப்பு ஒரு நாள் சர்வதேச போட்டித் தொடரில் கொழும்பு பிரேமதாஸ விளையாட்டரங்கில் இலங்கை - தென்னாபிரிக்க அணிகளுக்கு இடையில் நேற்று நடைபெற்ற இறுதி ஆட்டத்தில் இலங்கை அணி 30 ஓட்டங்களால் வெற்றி பெற்றதன் மூலம் கிண்ணத்தைத் தனதாக்கியது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணித்தலைவர் சனத்ஜெயசூரியா தனது அணி முதலில் துடுப்பெடுத்தாடும் என அறிவித்தார். ஆரம்ப துடுப்பாட்டம் மிக சிறப்பாக அமைய 50 ஓவர்கள் நிறைவில் இலங்கை அணி 7 விக்கெட்டுக்களை இழந்து 294 ஓட்டங்களை பெற்றது.

அணிக்காக சனத்ஜெயசூரிய 68 ஓட்டங்களையும் ரசல் ஆர்னல்ட் 51 ஓட்டங்களையும், அவிஸ்க குணவர்த்தன 49 ஓட்டங்களையும் பெற்ற

(12ஆம் பக்கம் பார்க்க)

## இனப்பிரச்சினைப் பேச்சுக்களில் புலிகளும் பங்குபெற வேண்டும்

### தமிழ்க் கட்சிகள் பிரிட்டிஷ் அமைச்சிடம் கோரிக்கை

கொழும்பு,ஜுலை15

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் முயற்சியில் இடம்பெறும் பேச்சுக்களில் விடுதலைப்புலிகளும் சேர்க்கப்பட வேண்டும் என்று தமிழ்க் கட்சிகள் பிரிட்டிஷ் வெளியுறவு ராஜாங்க அமைச்சர் பீற்றர் வெஸ் மகெட்டிடம் கோரிக்கை விடுத்துள்ளன.

இலங்கைக்கு இரு நாள் விஜயம் மேற்கொண்டுள்ள அவரை தமிழ்க்கட்சிகளின் பிரதிநிதிகள் நேற்று மாலை சந்தித்துக் கலந்துரையாடினர்.

பிரிட்டிஷ் தூதரின் இல்லத்தில் நடந்த இந்தச் சந்திப்பில் தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் என். ரவிராஜ், ஈ.பி.டி.பி. சார்பில் அதன் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா, ஆலோசகர் விக்கினேஸ்வ

(12ஆம் பக்கம் பார்க்க)

## துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் யாழ். இந்து மாணவன் சடலமாக ஒப்படைப்பு

துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் இளைஞன் ஒருவரின் சடலம் பொலீஸாரால் யாழ். ஆஸ்பத்திரியில் நேற்று முன்தினம் மாலை ஒப்படைக்கப்பட்டது.

வண்ணார்பண்ணையைச் சேர்ந்த யாழ். இந்துக்கல்லூரி உயர்தர வகுப்பு மாணவனான சோமசுந்தரம் சஞ்சீவன் (வயது 18) என்பரே இறந்தவராவார். அவரது சடலத்தை அவரது தாயார் நேற்றுக் காலை அடையாளம் காட்டினார்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## அரசு ~ ஐ.தே.க. மீண்டும் திங்களன்று சந்திக்க முடிவு

ஐ.தே.கவும், அரசதரப்பும் அரசமைப்புச் சீர்திருத்தம் தொடர்பாக இணக்கம் கண்ட பல விடயங்களில் தமிழ்க்கட்சிகள் அதிருப்தி தெரிவித்ததை அடுத்து ஐ.தே.கவும் அரச தரப்பும் மீண்டும் பேச்சுவார்த்தை நடத்த உள்ளன.

இந்தச் சந்திப்பு எதிர்வரும் திங்கட்கிழமை இடம்பெறவுள்ளது.

ஐ.தே.கவுடன் இணக்கம் கண்ட விடயங்கள் தொடர்பாக அரச தரப்பு கடந்த சில நாள்களாக தமிழ்க் கட்சிகளுடன் பேச்சு நடத்தியிருந்தது. இணக்கம் கண்ட விடயங்களுக்கு தமிழ்க் கட்சிகள் பல எதிர்ப்புத் தெரிவித்ததை அடுத்தே ஐ.தே. கவுடன் மீண்டும் பேச்சு நடத்த அரச தரப்பு தீர்மானித்துள்ளது. (இ-4)

## இனப்பிரச்சினைத் தீர்வு முயற்சியில் நோர்வே மந்தகதியில் செயற்படுகிறது

### இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர் மங்கள முனசிங்க கண்டனம்

புதுடில்லி,ஜுலை15

இலங்கை இனநெருக்கடிக்கு தீர்வுகாணும் சமாதான முயற்சிகளைப் பொறுத்தவரை, நோர்வே மிகவும் காலம் தாழ்த்தும் வகையில் மந்தகதியில் செயற்பட்டு வருகின்றது.

இப்படிக் கூறியுள்ளார் இந்தியாவுக்கான இலங்கைத்தூதுவர் மங்கள முனசிங்க.

பிரிட்டனுக்கான இலங்கைத் தூதுவராகப் பதவி ஏற்கவிருக்கும் இவர் புதுடில்லியில் 'ஸ்ரார்' தொலைக்காட்சிக்கு நேற்று முன்தினம் அளித்த பேட்டியிலேயே மேற்கண்டவாறு நோர்வேயை குற்றம் சாட்டினார்.

பேட்டியில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நோர்வே நல்ல காரியத்தைத் தான் செய்கின்றது. தன்னால் ஆன முயற்சிகளை நோர்வே மேற்கொண்டு வருகின்றது. ஆனால் நோர்வே கூடுதலான காலத்தை எடுக்க விரும்புகின்றது. நோர்வே நல்லதைச் செய்ய முடியுமானால்,

(12ஆம் பக்கம் பார்க்க)

## வரதராஜப்பெருமாளுக்கு பிரதிச் சபாநாயகர் பதவி?

கொழும்பு,ஜுலை15

வடக்கு - கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் அ.வரதராஜப்பெருமாளை தேசிய பட்டியல் எம்.பி. ஆக்கி அவரைப் பிரதிச் சபாநாயகராக நியமிக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கொழும்புச் செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன.

தேசியல் பட்டியல் மூலம் நியமன எம்.பியான அனில் முனசிங்க தற்சமயம் பிரதிச் சபாநாயகராகப் பணியாற்றுகிறார்.

அனில் முனசிங்க ஆஸ்திரேலிய தூதுவராக நியமிக்கப்பட்டுள்ளதை அடுத்தே அவரது இடத்துக்கு வரதராஜப்பெருமாளை நியமிக்க ஜனாதிபதி ஆலோசனை செய்து வருகிறார் என்று தெரிவிக்கப்பட்டது. (இ-3-7)

## பாக். இராணுவ ஆட்சியாளர் முஷாரப்புடன் ஸ்ரீலால் வீரசூரிய அரை மணி நேரம் பேச்சு

### இன்று லஷ்மன் ஜெயக்கொடியும் சந்திக்க ஏற்பாடு

கொழும்பு,ஜுலை15

பாகிஸ்தான் சென்றுள்ள இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஸ்ரீலால் வீரசூரிய இராணுவ ஆட்சியாளர் ஜெனரல் முஷாரப்புடன் நேற்று அரைமணி நேரம் பேச்சுக்கள் நடத்தினார் என்று ரோய்ட்டர் தகவல் வெளியிட்டுள்ளது.

இருவரும் பேசிய விடயங்கள் குறித்து தகவல் எதுவும் வெளியாகவில்லை.

அதேநேரம் - ஜனாதிபதியின் விசேட தூதுவராக பாகிஸ்தான் சென்றுள்ள கலாசார, சமயவிவகார அமைச்சர் லஷ்மன் ஜெயக்கொடி பாகிஸ்தான் இராணுவ ஆட்சியாளர் முஷாரப்பை இன்று சந்தித்துக் கலந்துரையாட இருக்கின்றார்.

அச்சமயம் ஜனாதிபதியின் விசேட செய்தியையும் அவரிடம் அமைச்சர் கையளிப்பார்.

அமைச்சர் ஜெயக்கொடி நாளை கொழும்பு திரும்புவார். (இ-3-4)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# தனியார் மருத்துவ நிலையங்களுக்கு மருந்து வகைகள் வருவது தாமதம்

## பற்றாக்குறை ஏற்படும் ஆபத்து

யாழ்ப்பாணம்,ஜுலை15

யாழ். மாவட்டத்தில் உள்ள தனியார் மருத்துவ நிலையங்கள் மற்றும் பார்மஸிகளுக்கு கொழும்பிலிருந்து மருந்துப்பொருள்களை எடுத்து வரமுடியாமலிருப்பதால் மருந்துவகைகளுக்குத் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் தோன்றியுள்ளது.

மருந்து வகைகளைக் கொண்டு வருவதற்கு பாதுகாப்பு அமைச்சின் அனுமதி கிடைப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாலேயே இவற்றைக் கொண்டுவர முடியாதுள்ளதாகத் தனியார் மருத்துவ நிலைய வட்டாரங்களில் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்ப்பாணத்தில் உள்ள மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம், யாழ். போதனா வைத்தியசாலை போன்றவற்றிற்கு செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு கப்பல் மூலம் மருந்து வகைகள் எடுத்துவரப்படுகின்றன. ஆனால் இந்த மருந்து வகைகளினால் யாழ்ப்பாணத்தின் முழுத்தேவையையும் பூர்த்தி செய்ய முடியாதுள்ளது.

அரசாங்க ஆஸ்பத்திரிகளில் சிகிச்சை பெறச் செல்லும் நோயாளர்களுக்கு பல வேளைகளில் பார்மஸிகளில் மருந்து பெறுமாறு கூறி டாக்டர்களினால் சிட்டைகள் வழங்கப்படுகின்றன.

தனியார் பார்மஸிகளுக்கு மருந்து வகைகள் வந்து சேராமையினால் மருந்து வகைகளின் இருப்பு முடிவடையும் நிலையிலுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அடுத்த சில வாரங்களில் இந்த மருந்து வகைகள் கொழும்பிலிருந்து வந்து சேராதுவிட்டால் யாழ்ப்பாணத்தில் மருந்து வகைகளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட வாய்ப்புள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஜ-5)

### யாழ். போதனா வைத்தியசாலை

# மூலதனச் செலவுக்கான நிதி இதுவரை கிடைக்கவில்லை

யாழ்ப்பாணம்,ஜுலை14

யாழ். போதனா வைத்தியசாலைக்கு இவ்வருடத்துக்கான மூலதனச் செலவுக்கான நிதி கொழும்பிலுள்ள சுகாதார அமைச்சினால் இதுவரை அனுப்பிவைக்கப்படவில்லை.

இவ்வருடத்திற்கான அரையாண்டு கடந்துவிட்ட போதிலும் இந்நிதியை அனுப்புவதற்கான ஏற்பாடுகள் எதுவும் செய்யப்படவில்லை என்று ஆஸ்பத்திரி வட்டாரங்களில் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிதி கிடைக்காமையினால் வைத்தியசாலை வார்ட் மற்றும் பகுதிகளுக்கான வேலைகளைச் செய்யமுடியாதுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை - வைத்தியசாலை நடைமுறைச் செலவுக்கான நிதி ஏற்கனவே வந்து சேர்ந்துள்ளது. (ஜ-5)

# மானிப்பாயில் தங்கியுள்ளோருக்கு நாவாந்துறையில் குடிசைகள்

மானிப்பாய்ப் பகுதி பாடசாலைகளில் தங்கியுள்ள குருநகர், பாசையூர் மக்களுக்கு நாவாந்துறையில் குடிசைகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன.

அகதிகளுக்கான ஐ.நா.தூதரகத்தின் ஏற்பாட்டில் இந்தக் குடிசைகள் அமைக்கப்படவுள்ளன என்று யாழ். அரச அதிபர் க.சண்முகநாதன் தெரிவித்தார்.

மானிப்பாய் இந்துக்கல்லூரி, மானிப்பாய் மகளிர் கல்லூரி போன்றவற்றில் குருநகர், பாசையூர் பகுதிகளைச் சேர்ந்த முந்நூறுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் தங்கியுள்ளன.

இந்தக் குடிசைகள் மலசல கூடம் மற்றும் கிணறு, குடிதண்ணீர் போன்ற அடிப்படை வசதிகளுடன் அமைக்கப்படவுள்ளன.

# இவ்வருடத் தேவைக்கான மலத்தியோன் வரவில்லை!

யாழ்ப்பாணம்,ஜுலை15

யாழ். மாவட்டத்துக்கு இவ்வருடத்துக்குத் தேவையான மலத்தியோன் இதுவரையும் கொழும்பிலிருந்து அனுப்பப்படவில்லை.

கடந்த வருட இறுதியில் வந்து சேர்ந்த மலத்தியோன் மூலமே தற்பொழுது நுளம்பு ஒழிப்புக்கான மலத்தியோன் விசிறும் வேலைகள் நடைபெற்று வருகின்றன.

யாழ்.சுகாதாரத்திணைக்களத்திடம் இருக்கும் மலத்தியோன் கையிருப்பு இம்மாதத் தேவைக்கு மட்டுமே போதுமானதாக இருக்கிறது.

யாழ். மாவட்டத்துக்குரிய மலத்தியோன் அனுப்பிவைக்குமாறு சுகாதாரத் திணைக்களத்திடம் அறிவிக்கப்பட்டு பல மாதங்களாகி விட்டபோதும் யாழ்ப்பாணத்திற்கு மலத்தியோன் அனுப்பப்படவில்லை என்று சுகாதாரப்பகுதி உத்தியோகத்தர் ஒருவர் கூறினார்.

### ஜெனரேட்டர் கொள்வனவு

தெல்லிப்பழை கால்நடை வைத்தியர் பிரிவினர் 70 ஆயிரம் ரூபா பெறுமதியான ஜெனரேட்டர் ஒன்றை கொள்வனவு செய்துள்ளனர்.

இவ்வியந்திரத்தைக் கொண்டு தெல்லிப்பழை கால்நடைவளர்ப்போர் சங்கம் மூலம் பாற்பொருள்கள் உற்பத்தி செய்யப்படவுள்ளன.

வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் பிரமாண அடிப்படையிலான மூலதன நிதியிலிருந்து இவ்வியந்திரக் கொள்வனவு இடம்பெற்றுள்ளது. (ஜ-152)

### அத்தியாவசிய பொருள்களுடன் சஜிந்த

இரண்டாயிரத்து 46 மெற்றிக் தொன் உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களுடன் 'சஜித்த' கப்பல் நேற்றுப் பருத்தித்துறைக்கு வந்து சேர்ந்தது. பொருள் இறக்கும் பணி நேற்றே ஆரம்பமானது. (இ-109)

## கணேசன் வைத்திய நிலையம்

கைதடி விக்கினேஸ்வர வித்தியாசாலைக்கு முன்பாக இயங்கிவந்த வைத்திய நிலையம் தற்போது 'ஸ்கந்த வில்லா' (SKANDA VILLA) 225, கே.கே.எஸ். வீதி, (ஜெட் மோட்டோஸ் சந்திக்கு அருகில்) சுன்னாகத்தில் இயங்கி வருகின்றதென்பதை அறியத்தருகின்றேன்.

Dr. V.கணேசலிங்கம்
(R.M.P.)

(76404)

## வங்கி அறிவித்தல்

யாழ். மாவட்டத்தில் இயங்கும் இலங்கைவங்கி, மக்கள் வங்கி, தேசிய சேமிப்பு வங்கி ஆகியவற்றின் கிளைகளும், வரையறுக்கப்பட்ட இலங்கை வர்த்தக வங்கி மற்றும் ஹட்டன் நஷனல் வங்கியும் 17-07-2000 திங்கள் முதல் கீழ்க்கண்டவாறு வாடிக்கையாளர்களுக்காகத் திறந்திருக்கும் என இத்தால் அறிவிக்கின்றோம். யாழ். நகரில் உள்ள சகல வங்கிக் கிளைகளும் (வேலணை இலங்கை வங்கிக் கிளை உட்பட) மு.ப. 9.30 மணிமுதல் பி.ப. 1.00 மணி வரை. ஏனைய சகல வங்கிக் கிளைகளும் மு.ப. 9.00 மணி முதல் 1.00 மணிவரை வாடிக்கையாளர்களுக்காகத் திறந்திருக்கும்.

மேலும் காசோலைகள் திருப்பப்படும்போது வழமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதையும் இத்தால் அறியத் தருகின்றோம்.

தலைவர்,
யாழ். மாவட்ட வங்கியாளர் சங்கம்.

(C/12222)

## கண்ணீர் அஞ்சலி

எமது பரிபாலனசபையின் உப தலைவர்

### அமரர் தம்பு தர்மலிங்கம்

அவர்களின் அமரத்துவத்தையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவர்தம் ஆத்மசாந்திக்காக நெட்டிலிப்பாய் விநாயகப்பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.

- பரிபாலனசபையினர்,

*நெட்டிலிப்பாய் பிள்ளையார் கோயில்,*
*கோண்டாவில்.*

(76410)

## கண்ணீர் அஞ்சலி

எமது கலாசாலையின் ஆசிரிய மாணவி

செல்வி பொ.வசந்தகுமாரி அவர்களின்

(ஆரம்பக் கல்வி B முதலாம் வருடம்)

தந்தையார்

### க. பொன்னம்பலம்

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கலாசாலைச் சமூகம்,
ஆசிரிய கலாசாலை,கோப்பாய்.

(76406)

NOTICE

UNIVERSITY OF JAFFNA, SRI LANKA.

FACULTY OF MEDICINE

## ORIENTATION PROGRAMME

The Orientation Programme for the 1999 Batch (New Admission) will commence on **04th September 2000**.

*Registrar*

2000.07.11 (C/12219)

## ராஜா

(யாழ்ப்பாணம்)

இன்று முதல் குதூகல ஆரம்பம்

பிரபுதேவா, ரோஜா, சரத்குமார், கபாலி மற்றும் பலர் நடிப்பில் இனிய பாடல்கள் நிறைந்த

### இந்து

புதிய நேரம் 10.30,2.00

(C/12207)

## நாகம்ஸ்

(சுன்னாகம்)

இன்று முதல் குதூகல ஆரம்பம்

ரஜனி, சௌந்தர்யா நடித்த

### படையப்பா

(ரீல்ஸ்)

காட்சிகள் 11.00, 2.30 (புதிய நேரம்)

(C/12223)

சிறுப்பிட்டி அருள்மிகு தன கலட்டி செல்லப்பிள்ளையார் ஆலய

## தேர் வெள்ளோட்ட விழா

**இன்று (15-07-2000) சனிக்கிழமை காலை 8-00 மணிக்கும்**

**தேர்த் திருவிழா காலை 10-00 மணிக்கும் நடைபெறவுள்ளது.**

தேர்ஸ்தபதி விஸ்வப்பிரம்மஸ்ரீ செ.பாலச்சந்திரன் அவர்களும் கட்டடப் பொறியியலாளர் திரு. சண்முகநாதன் அவர்களும் தங்கப்பதக்கம் வழங்கிக் கௌரவிக்கப்படுவர்.

தேர் நிர்மாணிப்பு:- செ.பாலச்சந்திரன் குழுவினர்
ஸ்ரீ காளிகா சிற்பாலயம், புத்தூர்.

- தேர்த் திருப்பணிச்சபை

*விளம்பர அன்பளிப்பு:-* பொ.கனகலிங்கம்(சாமி),
முருகன் களஞ்சியம்,
சிறுப்பிட்டி.

(76407)

## ஆண்டு மிலேனியத்தில் அகவை ஒன்று



இராஜேந்திரன் - சுபாசினி தம்பதிகளின் செல்வப்புதல்வி

## ஹம்சிகா

தனது முதலாவது பிறந்ததினத்தை நேற்று (14-07-2000) வெள்ளிக்கிழமை மானிப்பாய் வீதி, மருதனார்மடத்திலுள்ள தனது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடினார்.

ஹம்சிகாவை அவரது அன்பின் அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, சித்தப்பா, அம்மப்பா, அம்மம்மா, சித்தி, ஆசை மாமா, ஹொலண்டிலுள்ள மாமா, அத்தை, மச்சாள்மாராகிய சகானா, துர்க்கா, அத்தான் சஜீப், பிரான்சிலுள்ள பெரியமாமா, அத்தை, நிருபன் அத்தான், குட்டி அத்தான் ஜேர்மனியிலுள்ள சின்னமாமா, அத்தை, அத்தான் சுஜீபன், பூட்டிமார் மற்றும் உற்றார், உறவினர் அனைவரும் உடுவில் மீனாட்சி அம்மன் துணைகொண்டு, பல்லாண்டு காலம் இன்பமுடன் சீரும் சிறப்புமாக வாழ வாழ்த்துகின்றனர்.

*மானிப்பாய் வீதி,*
*மருதனார்மடம்.*

தகவல்:
*சண்முகநாதன்*
(அம்மப்பா)

(C/12195)

# காஷ்மீரில் 3 பௌத்த பிக்குகள் முஸ்லிம் தீவிரவாதிகளால் கொலை!

## பதற்றத்தை அடுத்து ஊரடங்கு

ஸ்ரீநகர், ஜூலை 15

ஜம்மு — காஷ்மீரில் மூன்று பௌத்த பிக்குகள் முஸ்லிம் தீவிரவாதிகளால் கடந்த புதன்கிழமை சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

பௌத்தர்கள் கூடுதலாக வாழும் நகருக்குள் நுழைந்த முஸ்லிம் தீவிரவாதிகள் அங்கிருந்தவர்களைத் தாக்கியதாகவும் —

அதன் பின்னர் மூன்று பிக்குகளைச் சுட்டுக்கொலை செய்ததாகவும் —

தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து அங்கு ஏற்பட்ட பதற்றமான சூழ்நிலையை அடுத்து அந்தப் பிரதேசத்தில் ஊரடங்கு அமுல் செய்யப்பட்டுள்ளது.

அந்தப் பகுதியில் அமைதியை நிலைநாட்டுவதற்காக மேலதிக படையினரும் அங்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

முஸ்லிம் தீவிரவாதிகளைக் கைது செய்யப் படையினர் அங்கு தேடுதலை மேற்கொண்டுள்ளனர்.

(ஐ-க-3

# வியட்நாம் மீதான தடைகளை அதிபர் கிளின்ரன் நீக்கினார்!

வாஷிங்ரன், ஜூலை 15

வியட்நாம் மீது கடந்த ஐந்து வருடகாலமாக விதித்திருந்த பொருளாதாரத் தடையை நீக்க அமெரிக்க ஜனாதிபதி பில்கிளின்ரன் முன்வந்துள்ளார்.

இதற்கு வசதியாக வரலாற்றுச் சிறப்புமிக்க ஒப்பந்தம் ஒன்றில் அமெரிக்காவும் — வியட்நாமும் கைச்சாத்திட்டுள்ளன.

நீண்டகாலமாக இருநாடுகளுக்கும் இடையில்சீர்குலைந்திருந்த ராஜீக உறவுகள் மீண்டும் புத்துயிர் பெற்றுள்ளன.

இருநாடுகளும் பொருளாதார உறவுகளை வளர்க்கும் வகையில் இருநாடுகளும் தொடர்ந்து பேச்சுக்களை நடத்தவிருக்கின்றன.

(ஐ-க-3)

## பிரேரணை ரத்து!

இந்தியாவிற்கு வளர்ச்சி நிதியாக அமெரிக்கா வழங்கவுள்ள உதவியைக் குறைக்க வேண்டும் எனக்கோரி அமெரிக்க குடியரசுக் கட்சி உறுப்பினர் ஜோன் பேடன் அமெரிக்க காங்கிரஸில் கொண்டு வந்த பிரேரணை விலக்கிக் கொள்ளப்படுள்ளது.

(ஐ க)

## சுட்டுக்கொலை

பங்களாதேஷ் அரசுக்கு ஆதரவான பேரணி ஒன்றில் கலந்து கொள்ளச் சென்ற ஐந்து மாணவர்களையும் அவர்கள் சென்ற வாகனச் சாரதியையும் அடையாளம் தெரியாத கும்பல் ஒன்று சுட்டுக் கொன்றது.

பொதுத்தேர்தல் நடைபெறஉள்ளதைத் தொடர்ந்து பங்களாதேஷில் வன்முறைகள் பெருகிவருவது குறிப்பிடத்தக்கது. (இ-ஒ)

## பஸ்ஸில் இருந்து குதித்த நால்வர் பலி!

பஸ் விபத்தில் இருந்து உயிர் தப்புவதற்காக பஸ்ஸில் இருந்து குதித்த நான்கு பேர் உயிரிழந்தனர்.

இச்சம்பவம் திருவள்ளூர் மாவட்டத்தில் இடம்பெற்றது.

குறிப்பிட்ட பயணிகள் பயணம் செய்தபஸ் வான்ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளாவதைத் தடுக்கும்நோக்கில் பஸ் திருப்பப்பட்ட போது அது கவிழ்ந்தது. பஸ்ஸில் இருந்து தம் உயிரைக் காப்பாற்றுவதற்காக ஜன்னல் வழியே குதித்த நான்கு பயணிகளுமே படுகாயமடைந்து பின்னர் உயிரிழந்தனர். (க)

## மாநில ஆளுநர்குழு

இந்தியாவில் பிற்படுத்தப்பட்ட மற்றும் பழங்குடி மக்களின் நலனைக் கவனிக்கும் முகமாக 'மாநில ஆளுநர் குழு' ஒன்று அமைக்கப்படவுள்ளது.

புதுடில்லியில் கடந்த புதன்கிழமை ஜனாதிபதி கே. ஆர். நாராயணனின் தலைமையில் மாநில ஆளுநர்களுடன் நடைபெற்ற கூட்டத்தில் நாராயணன் இந்த முடிவினை அறிவித்தார்.

பிற்படுத்தப்பட்ட மக்களுக்கென ஒதுக்கப்பட்ட நிதி அவர்களுக்கு முறையாகச் — சரியாகப்— பயன்படுத்தப்படுகின்றதா என்பதை இக்குழு தீவிரமாக ஆராயும் எனவும் இந்திய ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

(ஐ-க)

# பிஜி பழங்குடி இன அதிபர் நியமனம்!

# கிளர்ச்சியாளர் ஆயுதம் கையளிப்பு!!

## இன்னும் ஒரு வாரத்தில் புதிய அரசு பதவியேற்பு

சுவா, ஜூலை 15

பிஜி நாட்டில் கிளர்ச்சியாளர்களுக்கும் இராணுவத்துக்கும் இடையே உடன்படிக்கை ஏற்பட்டிருப்பதை அடுத்துக் கிளர்ச்சியாளர்கள் ஒரு தொகுதி ஆயுதங்களைக் கையளித்துள்ளனர். அதேவேளை பூர்வீகக் குடிகளின் மகாசபை கூடிப் புதிய அதிபரைத் தெரிவு செய்துள்ளது. இன்னும் ஒருவாரகாலத்தில் புதிய அரசு பதவியேற்கும் என்று அறிவிக்கப்படுகிறது.

கிளர்ச்சித் தலைவர் ஸ்பைட்டின் ஆதரவாளரான ராவூத் லெஸோ பா எலோனியோவே புதிய அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

கடந்த மே மாதம் 19 ஆம் திகதி முதல் நாடாளுமன்றக் கட்டடத்தில் இந்திய வம்சாவளி பிரதமர் மகேந்திர சௌத்ரி உட்பட 27 பேரைக் கிளர்ச்சியாளர்கள் பணயக் கைதிகளாகத் தடுத்து வைத்திருந்தனர்.

இவர்களை விடுதலை செய்யும் நோக்குடன் இராணுவத்துக்கும் கிளர்ச்சிக்காரர்களுக்கும் இடையே ஒப்பந்தம் ஒன்று எட்டப்பட்டது.

ஒப்பந்தத்தின் படி —

பூர்வீகக் குடிகளில் இருந்தே பிஜிக்கான புதிய அதிபர் மற்றும் பிரதமர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்று கிளர்ச்சியாளர்களும் —

கிளர்ச்சியாளர்களின் கோரிக்கை நிறைவேறும் பட்சத்தில் அவர்கள் தமது ஆயுதங்களை இராணுவத்தினரிடம் கையளிக்க வேண்டும் என்று இராணுவத்தினரும் — கேட்டிருந்தனர்.

ஒப்பந்தத்தின் படி கிளர்ச்சிக்காரர்களால் தடுத்து வைக்கப்பட்டிருந்த பிரதமர் சௌத்திரி உட்பட 57 பேரும் நேற்று முன்தினம் விடுதலை செய்யப்பட்டனர். அதனைத் தொடர்ந்து பூர்வீகக்குடி மாகாசபை கூடி புதிய அதிபரைத் தெரிவு செய்துள்ளது.

இதேவேளை —

''பிஜியின் நாடாளுமன்றக் கட்டடத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த பிணைக் கைதிகள் அனைவரும் விடுவிக்கப்பட்டாலும் கூட பிஜி அராஜகத்தை நோக்கி சென்று கொண்டிருக்கின்றது. அங்கு ஜனநாயகம் குலைந்திருப்பது பெரிய ஆபத்தாகும். அங்குள்ள மக்களுக்கு அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டால் பிஜி மீது பொருளாதாரத்தடை விதிக்கப்படும்'' என நியூசிலாந்தின் பிரதமமந்திரி ஹெலன் ஸாக் தெரிவித்துள்ளார்.

(க)

## தீவிரவாதிகள் தாக்கியதாக மகேந்திர சௌத்ரி கூறுகிறார்

### தடுத்து வைத்திருந்த காலத்தில்

சுவா, ஜூலை 15

பணயம் வைக்கப்பட்டிருந்த சமயம் பிஜி கிளர்ச்சிக்காரர்களால் தான் தாக்கப்பட்டதாக இந்திய வம்சாவளிப் பிரதமர் மகேந்திர சௌத்ரி தெரிவித்துள்ளார்.

பிஜி தீவிரவாதிகளால் 56 நாள்கள் தடுத்து வைக்கப்பட்ட பின் நேற்று முன்தினம் விடுதலை செய்யப்பட்ட சௌத்ரி தாம் தடுத்து வைக்கப்பட்ட முதல் ஒருவாரகாலமும் தீவிரவாதிகளின் தாக்குதலுக்கு உள்ளானதாகத் தெரிவித்தார். (ஐ-க)

## புலிகளின் ஆதரவாளர்கள் மீது தமிழகப் பொலிஸ் கண்காணிப்பு!

சென்னை, ஜூலை 15

தமிழகத்தில் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகச் செயற்படும் அமைப்புக்கள் மற்றும் கட்சிகளைத் தமிழ்நாட்டுப் பொலிஸார் தீவிரமாகக் கண்காணித்து வருகின்றனர்.

விடுதலைப்புலிகளுக்கு ஆதரவாகப் பேசி வரும் பிரமுகர்களைத் தீவிர விசாரணைகளுக்கு உட்படுத்தும் பொலிஸார் பிரபாகரனின் படம் மற்றும் ஆதரவுப் பிரசுரங்களை அச்சிடுவது சட்டவிரோதச் செயல் என்று அச்சகங்களுக்கு எச்சரிக்கையும் விடுத்துள்ளனர்

தமிழகப் பொலீஸார் சட்டப்படி நடவடிக்கை எடுக்காமல் தமது அதிகாரத்தைப் பயன்படுத்தி இத்தகைய அச்சுறுத்தல்களை விடுத்து வருவது குறித்துத் தமிழ் ஆதரவாளர்கள் கடும் அதிருப்தி கொண்டுள்ளதாக ஏஜென்ஸி செய்திகள் தெரிவித்தன.

(ஐ-ஓ-க-3)

## ஜம்மு - காஷ்மீரில் செயற்படும் பல தீவிரவாதக் குழுக்களின் தளங்கள் பாகிஸ்தானில்!

''ஜம்மு — காஷ்மீர் பகுதிகளில் பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் பல பிரிவினைவாதக் குழுக்களும் இனவாதக் குழுக்களும் பாகிஸ்தானையே தமது தளமாகப் பயன்படுத்துகின்றன என்று மூத்த அமெரிக்க அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

உலகப் பயங்கரவாதம் பற்றிய பிரதிநிதிகள் சபையின் சர்வதேச உறவுக் குழுவில் பயங்கரவாதம் குறித்து சாட்சியமளிக்கையிலேயே அமெரிக்க வெளியுறவுத்துறையின் பயங்கரவாத எதிர்ப்பு ஒருங்கிணைப்பாளர் மைக்கேல் சிங்கானே இதனைத் தெரிவித்தார்.

ஜம்மு — காஷ்மீரில் கலகங்களைத் தூண்டிவிடுவதில் இஸ்லாமாபாத் பங்கு வகிப்பதையே இந்த நிலைமை காட்டுகின்றது எனவும் அவர் கூறினார். (ஐ-க)

## எய்ட்ஸுக்கு தடுப்பு ஊசி மருந்து நைஜீரிய விஞ்ஞானி கண்டுபிடிப்பு!

லண்டன், ஜூலை 15

எய்ட்ஸ் நோயைக் குணப்படுத்தக் கூடிய ஊசி மருந்து ஒன்றை நைஜீரிய விஞ்ஞானியான ஜெரனியா அமல்கா கண்டுபிடித்துள்ளார்.

இந்த ஊசி மருந்தை ஏற்றிக்கொள்வதன் மூலம் எய்ட்ஸ் நோய் எதிர்ப்பு சக்தி உடலில் ஏற்படுவதாக அமல்கா தெரிவித்துள்ளார்.

இவர் தனது கண்டுபிடிப்பை நிருபிக்கக்கூட முன் வந்துள்ளார் 'தனது உடலில் எச். ஐ. வி. வைரஸ் எதிர்ப்பு சக்தி இருப்பதாகவும் பொதுமக்கள் முன்னிலையில் தனது உடலில் எச். ஐ. வி. வைரஸைச் செலுத்தித் தனக்கு எய்ட்ஸ் பீடிக்காமல் இருப்பதைக் காட்டமுடியும்' என்றும் கூறியுள்ளார்.

இவரின் கூற்றின் உண்மை நிலையைக் கண்டறிய நைஜீரிய அரசு 14 பேர் கொண்ட குழு ஒன்றை நியமித்துள்ளது.

இதேவேளை —

எய்ட்ஸ் நோயினால் பீடிக்கப்பட்டிருந்த 30 இராணுவ வீரர்கள் இந்த ஊசி மருந்தைச் செலுத்தி ஐந்து வாரகாலங்களில் சுகமடைந்ததாக நைஜீரிய இராணுவத் தளபதி ஒருவர் தெரிவித்திருப்பது குறிப்பிடத்தக்கது. (க)

## பாகிஸ்தானில் பஸ் விபத்து: 19 சிறுவர் பலி

பாகிஸ்தானில் பாடசாலை பஸ் ஒன்று பெரும் பள்ளத்தில் வீழ்ந்ததில் 19 சிறுவர்கள் உடல் நசுங்கி இறந்தனர்.

சாரணர் படை முகாம் ஒன்றுக்குப் பாடசாலை மாணவர்களை ஏற்றிச் சென்ற பஸ்ஸே விபத்துக்குள்ளானது.

(ஐ-ஒ)

## இந்திய மாநிலங்களில் அடை மழையால் சேதம்

### நூற்றுக்கணக்கானோர் பலி!

மகாராஷ்டிரா மற்றும் குஜராத் மாநிலங்களில் தொடரும் அடைமழை காரணமாக உயிரிழந்தோர் எண்ணிக்கை நூறைத் தாண்டி விட்டது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை ஆரம்பமான மழை தொடர்வதால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மகாராஷ்டிராவில் உயிரிழந்த 91 பேரில் மும்பையில் மட்டும் 63 பேர் உயிரிழந்ததாகவும் —

அங்கு ஏற்பட்ட மண்சரிவினால் 58 பேர் உயிரிழந்ததாகவும்—தெரிவிக்கப்பட்டது

இந்த மாநிலங்களில் இதுவரை நூறு பேரின்சடலங்கள் மீட்கப்பட்டன என்றும் —

சுமார் 400 பேர் வரை உயிரிழந்திருக்கக் கூடும் என அஞ்சப்படுவதாகவும் —

பி. பி. ஸி தெரிவித்தது.

(ஐ-3)

# இதோ! வெளிவந்து விட்டது!

'நாமும் சுற்றாடலும்'
புதிய பாடத்திட்டத்திற்கமைவான தரம் 2இற்கான சுற்றாடல் செயற்பாடு.

வெளியீடு : ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை,
235, K.K.S. Road, யாழ்ப்பாணம்.

(76367)


# 9ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 19 | 15 |
| — | — |
| 05 | 07 |
| — | — |
| 1936 | 1991 |

அமரர்
## கணபதி செல்வராசா
(ஓய்வு பெற்ற மின் இணைப்பாளர், காங்கேசன்துறை)

ஓடி மறைந்ததே அப்பா ஒன்பதாண்டு
தேடி அலைகின்றோம் – நீங்கள்
சென்ற இடம் தெரியவில்லை?
பாசத்தின் பெருமை சொல்லி
பார் புகழ் கல்வியூட்டி
சுற்றவர் மத்தியில் எம்மை
தலை நிமிர்ந்து வாழ வைத்த
தெய்வமே அப்பா!
நாம் வாழும் நேரத்தில் ஓடி
நீங்கள் சென்றதெங்கே அப்பா?
ஆறாது அப்பா எம் துயரம்!

என்றும் உங்கள் பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள்

பொற்பதி வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.
(763 11)

# 4 ஆம் ஆண்டு நீங்கா நினைவு



## அமரர் சின்னையா பரஞ்சோதி

மலர்வு: 30 - 10 - 1932
உதிர்வு: 15 - 07 - 1996

அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி:- பரஞ்சோதி றோஸ்மலர்
மருமகன்:- பரமநாதன் கல்கி
சகோதரர்கள், பெறாமக்கள்.

தகவல்:–
பரமநாதன் சிசிலியம்மா (செல்வராணி)
27/11, புங்கயிரதக் கட்டைவை ஒழுங்கை,
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.
(76459)

# தமிழ் மன்றம் அங்குரார்ப்பணம்

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரியில் முதலாவது தமிழ் மன்றம் கடந்த திங்களன்று சம்பிரதாய பூர்வமாக அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது.

இந்தக்கல்லூரியின் ஆசிரிய மாணவர்களின் தாய்மொழித் திறன் விருத்திச் செயற்பாடுகளுக்கும் புதிய ஆக்கங்களுக்கும் இம்மன்றம் முக்கியத்துவம் அளித்துச் செயற்பட உள்ளது.

சஞ்சிகை வெளியீடு, மொழியியல் சுற்றல், கற்பித்தல், நுட்பசாதன உருவாக்கம், போட்டிகள் மூலம் திறன் நயப்புக்களை ஏற்படுத்தல், நவீனதொலைத் தொடர்பு சாதனங்கள் — கணனி — பத்திரிகைகள் வாயிலாக இலக்கியம், அறிவியல், அச்சியல் நுட்பவிருத்திகளை ஏற்படுத்தல் தொடர்பான களஅமர்வுச் செயற்பாடுகளையும் மன்றம் நடத்த உள்ளது

(இ-152)

# இடம்பெயர்ந்த மக்களுக்கு உதவி

சுதுமலை தெற்கு கிராம அலுவலர் பிரிவில் தங்கியுள்ள இடம்பெயர்ந்த மக்களுக்கு கிராம அலுவலர்மூலம் பாய், வாளி, சவர்க்காரம், ஜீவாகாரம் என்பன அண்மையில் வழங்கப்பட்டன.

அன்னம்மாள் தேவாலயம், மைசூர்மில், யூதாகோயில், சிந்மயபாரதி பாடசாலை ஆகிய முகாம்களில் தங்கியுள்ளவர்களுக்கே இவை வழங்கப்பட்டன.

(ஐ 10-17)

# தமிழ்மொழி தினப் போட்டிகள்

யாழ். கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான தமிழ்மொழித்தினப் போட்டிகள் எதிர்வரும் 18ஆம் 19ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன.

முதலாம் நாள் போட்டிகள் வைத்தீஸ்வராக் கல்லூரியிலும் இரண்டாம் நாள் போட்டிகள் யாழ். இந்து மகளிர் கல்லூரியிலும் நடைபெறும் என வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

(இ-7)

# விவசாயிகளுக்கு விதைகள்

பட்டினிக்கெதிரான நிறுவனத்தினால் சுதுமலை தெற்கில் வசிக்கும் நிரந்தர விவசாயிகளுக்கு அண்மையில் விதைகள் வழங்கப்பட்டன.

அத்துடன் கிராம அலுவலர் மூலம் அப்பகுதி தோட்டக் கிணறுகளை திருத்தம் செய்வதற்கான ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டன.

(ஐ-10)

# பதிவுகளை மேற்கொள்ள அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஜூலை 15
யாழ். பல்கலைக்கழகத்தில் வெளிவாரிக் கற்கைகளுக்கான பதிவுகளை மேற்கொள்வோர் விரைவில் தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான முடிவு தினம் ஒகஸ்ட் மாதம் 30 ஆம் திகதி ஆகும். எனினும் இறுதி வரை தாமதிக்காமல் பதிவுகளை முன்பே மேற்கொள்ளுமாறு வெளிவாரிப் பரீட்சைகள் அலகினர் தெரிவித்துள்ளனர்.

(ஐ – 10)


லாலா
நீலசோப்பின் மேலுறைகள் 5 சேர்த்துக் கொடுத்தால்
ஒரு அப்பியாசக் கொப்பி இலவசம்!
லாலா சோப் தொழிற்சாலை
அச்சுவேலி
(76405)


# மரண அறிவித்தல்கள்

## கந்தையா கருணாநிதி

நயினாதீவைப் பிறப்பிடமாகவும் கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் விவசாயத் திணைக்களத்தில் சேவையாற்றி வந்தவருமான கந்தையா கருணாநிதி அவர்கள் (12-07-2000) புதன்கிழமை கிளிநொச்சியில் அகாலமரணமடைந்து விட்டார்.

இவர் காலஞ்சென்ற கந்தையா சிதம்பரம் ஆகியோரின் அன்பு மகனும் பிறேமாவதியின் அன்புக் கணவரும், அசோக்குமார், ஹரிசமன்குமார், ரவிகுமார் ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜெகநாதனின் (விவசாய போதனாசிரியர்) அன்புச் சகோதரனும், ராதாவின் மைத்துனரும், நந்திவர்மன், பிரதீபா, காஞ்சனா ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
க. ஜெகநாதன் (சகோதரன்)
29/1, றக்கா றோட்,
யாழ்ப்பாணம்.
(76403)

## ஆ. பாலகிருஷ்ணன் (பாக்கியம்)

யாழ் சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும், மலேசியா தைப்பிங்கை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் – மனோன்மணி தம்பதியினரின் இளைய புதல்வரும், சிங்கப்பூர் விஜயகுமாரியின் கணவரும், சிவப்பிரகாஷின் தந்தையும் சிங்கப்பூர் சச்சிதானந்தன், யாழ் ஆனந்தா அச்சகம் வரதரின் துணைவியார் மகாதேவி' விவேகானந்தன் (தைப்பிங்) ஆகியோரின் இளைய சகோதரருமான பாலகிருஷ்ணன் (பாக்கியம்) 12-07-2000 அன்று சிங்கப்பூரில் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று 14-07-2000 வெள்ளி அன்று சிங்கப்பூரில் நடைபெற்றதாக செய்தி கிடைத்துள்ளது. உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இச் செய்தியை ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

- வரதர்

84/3, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.
(76491)

## இளையய்யா நடராசா

அரியாலை, 404, நாவலர் வீதியை நிரந்தர வதிவிடமாகவும் மடத்தடி ஒழுங்கை மானிப்பாயைத் தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட இளையய்யா நடராசா நேற்றுக் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையய்யா செல்லம்மாவின் அன்பு மகனும், இராசம்மாவின் அன்புக் கணவரும், மனோகரன் (பிரான்ஸ்), பாஸ்கரன் (லண்டன்), பிரபாகரன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், மல்லிகா, கேமா, பத்மினி ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான கந்தசாமி, சிவகுருநாதன் (ஆசிரியர்) மற்றும் சண்முகநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று காலை 10.00 மணியளவில் மடத்தடி ஒழுங்கை, மானிப்பாயில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்காகப் பூதவுடல் பிப்பிலி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர் யாவேருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
ந. இராசம்மா
மனைவி.

மடத்தடி ஒழுங்கை,
மானிப்பாய் தெற்கு,
மானிப்பாய்.
(76401)

## தம்பு தர்மலிங்கம்

(உப தலைவர் – பரிபாலன சபை,
நெட்டிலிப்பாய் பிள்ளையார் கோயில்)

கோண்டாவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில் மேற்கு, நெட்டிலிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பு தர்மலிங்கம் வியாழக்கிழமை (13- 07- 2000 ) அன்று சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பு அன்னம்மாவின் ஏக புத்திரனும், புவனேஸ்வரி (ராசாத்தி)யின் அன்புக் கணவரும், சரோமலாதேவி, சமலராணி, யோகராசா (ஜேர்மனி), கணபதி (ஜேர்மனி), சிவராசா (ஜேர்மனி), கோமதி, (லண்டன்), ஜெயகலா (ஜேர்மனி), தவராசா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், திருச்செல்வம் (வ.பி. போ. சபை), புஸ்பநாதன் (ஆசிரியர் – யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி), சாந்தினி (ஜேர்மனி), குலேந்திரன் (ஜேர்மனி), சிவாஜினி (ஜேர்மனி), செல்வநேசன் (லண்டன்), ஸ்ரீமோகன் (ஜேர்மனி), நிரஞ்சனி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், சர்மினா, பிரமிளா, பிரசாந்தி, தனுஷா, கஜேன், கௌசி, கீர்த்திகா, பிரகலாதலன், ஆய்ஷன், பார்த்தீபன், நிருஜா, அனுசன், யசிந்தன், மிதுனா, திவ்யா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று வெள்ளிக்கிழமை (14- 07- 2000) அவரது இல்லத்தில் நடைபெற்றது என்பதை உற்றார், உறவினர், அன்பர்கள் அனைவருக்கும் தெரியப்படுத்துகின்றோம்.

தகவல்:
மனைவி,
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

நவரட்ணராஜா வீதி,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.
(76497)

உதயன்

## எவ்வாறு ஏற்பது?

மலையைக் கல்லி எலியைப் பிடித்ததாகக் கதை ஒன்று உண்டு. இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் பொருட்டு அரசாங்கக் கட்சியும் எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியும் 'சரித்திரம்' படைத்து இணக்கம் கண்ட புதிய யோசனையின் முடிவும் அந்தக்கதை போலவே உள்ளது.

தமிழர் பிரச்சினைக்குத் தீர்வாக, அதிகாரத்தைப் பரவல் செய்வதாகக் கூறி ஜே.ஆர்.ஜெயவர்த்தனா கொண்டு வந்த மாவட்ட சபை வெறும் வட்டமாகி - சைபராகி - பிசுபிசுத்துப் போனமை பெரும் அரசியல் வரலாற்றுத் தோல்வி. அதனைப் புதுக்கியும் திருத்தியும், கூட்டியும் பெருக்கியும் ஜே.ஆரும் இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியும் அவசர அவசரமாகக் கொண்டு வந்த மாகாண சபையும் அனேகமாக அதேமாதிரித்தான்.

தமக்குக் கிடைக்கவேண்டிய ஆகக் குறைந்த ஆட்சிப்பகிர்வு என்று கருதும் சுயாட்சி அதிகாரம் கொண்ட அமைப்பு ஒன்றை உருவாக்குவதற்கு புதிய யோசனை வகைசெய்ய வேண்டும் என்று தமிழ் மக்கள் விரும்பினார்கள்.

பிராந்தியங்களின் ஒன்றியமாகவே நாட்டின் ஆட்சி வடிவம்விளங்கும் என்ற கருத்துப்பட அரசின் மூல யோசனையில் மேனி மினுக்கும் வாசகம்இருந்தமையால் தமிழர்கள் அவ்வாறு எதிர்பார்க்க நேர்ந்தது.

ஆனால் அந்த அம்சத்தில் அரசு - ஐ.தே.க தரப்புகள் முழு அளவில் இணக்கம் காணவில்லை. அதேவேளை இப்போது பதின்மூன்று வருடங்களாக இணைந்திருக்கும் தமிழர் தாயகமான வடக்கு - கிழக்கு மாகாணத்தை பிரிப்பதற்கு வகைசெய்ய இரு தரப்புகளும் இணக்கம் கண்டுள்ளன. காணி அதிகாரம் வழங்கப்பட்டாலும் வெளி மாகாணத்தவர்களின் குடியேற்றத்துக்கு இடமளிக்கும் வகையில் மத்திய அரசின் அதிகாரங்கள் மிகவும் பலமாக்கப்பட்டுள்ளன.

1995 ஆம் ஆண்டில் அரசாங்கம் வெளியிட்ட தீர்வு யோசனையில் இருந்து நியாயமான பல அம்சங்கள் வெட்டி நறுக்கப்பட்டு, பின்னர் 1997 இல் மேலும் உரித்துச் சுருக்கப்பட்ட வடிவத்திலேயே இப்போதைய யோசனை உள்ளது. இதனை ஏற்றுக்கொள்ள முடியாது என்று தமிழ் கட்சிகள் மறுத்துள்ளன; நிராகரித்தும் உள்ளன.

அவர்கள் மறுக்கிறார்களோ, நிராகரிக்கிறார்களோ தமது நீண்ட கால அரசியல் அபிலாஷைகளை அரசு - ஐ.தே.கட்சி இணக்கம் கண்ட தீர்வு யோசனை நிறைவேற்றவில்லை என்பதே தமிழ் மக்களின் கருத்தாகும். அரசியல் கட்சிகள் தமது நாடாளுமன்ற ஆசனங்களைக் கருத்தில் கொண்டு சில சிறு திருத்தங்கள் சேர்க்கப்பட்டால் ஏற்றுக் கொள்ளவும் கூடும். ஆயினும் தமிழ் மக்கள் இதனை முற்றாக நிராகரிக்கவே செய்வர்.

ஈழத் தமிழ் மக்கள் ஒரு தேசிய இனம் என்ற வகையில் அதற்குரிய ஆட்சி உரிமையை வழங்கும் விதத்தாலோ, பூரண சுயாட்சி வடிவம் கொண்டதாகவோ, இந்த நாட்டின் முதலாந்தரப் பிரஜைகள் - சிங்கள மக்களைப் போன்று சம அந்தஸ்து உள்ளவர்கள் - என்ற நிலையில் வாழ வழி செய்வதாகவோ அரசின் தீர்வு யோசனை அமையவில்லை என்பதும் வெள்ளிடை மலையாகத் தெரிகின்றது.

சமஷ்டி ஆட்சி முறை தேவை என்று கோரி ஜனநாயக வழியில், சாத்வீக முறையில் போராட்டம் நடத்திய காலம் தொடக்கம் இன்று வரை ஏற்பட்ட இழப்புக்கள், அவலங்கள், அவஸ்தைகளின் பின்னரும் அடிப்படை உரிமைகளை வழங்காத, பூரண சுயாட்சி அதிகாரம் தானும் வழங்காத இந்த யோசனையை தமிழ் மக்கள் எவ்வாறு ஏற்றுக்கொள்வது? ஏற்றுக்கொள்வேண்டும் என்று அரசாங்கமோ, எதிர்க்கட்சியோ எவ்வாறு எதிர்பார்க்க முடியும்?

# நிவாரணத்துக்கு பழுதடைந்த அரிசி ஒருபோதும் வழங்கப்படுவதில்லை!

## அரச அதிபர் விளக்கம்

அரச செயலகத்தின் களஞ்சியத்திலிருந்து பழுதான அரிசி நிவாரணத்திற்கு விநியோகிக்கப்படுவதில்லை என்று யாழ். அரச அதிபர் க.சண்முகநாதன் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் யாழ். செயலகத்தில் அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்துடன் நடத்திய கலந்துரையாடலில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

'நிவாரணத்திற்கு சில இடங்களில் பழுதான அரிசி விநியோகம் செய்யப்பட்டுள்ளது. இதற்கு யார் பொறுப்பு?' என்று இணையத்தின் பிரதிநிதிகள் கேள்வி எழுப்பிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது:-

அரச களஞ்சியத்தில் சேரும் பழுதான அரிசி முழுவதும் ஒன்றாக்கப்பட்டு உடனுக்குடன் இயந்திரங்கள் மூலம் உடைக்கப்பட்டு கோழித்தீனுக்கு வழங்கப்படுகிறது.

பழுதான அரிசி ஒரு போதும் பொதுமக்கள் பாவனைக்கு வழங்கப்படமாட்டாது.

ப.நோ.கூ.சங்கங்கள் நிவாரணத்திற்கான அரிசியினை அரச களஞ்சியத்திற்கான அரிசியினை அரச களஞ்சியங்களிலிருந்து பெறும்போது அதன் தரத்தினை பரிசோதித்தே எடுக்கிறார்கள்.

இவ்வாறு எடுக்கப்படும் அரிசியினை ப.நோ.கூ.சங்கங்களில் விநியோகிக்கும் போது அவற்றைக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் கண்காணித்து வருகிறார். எனவே ஒரு சந்தர்ப்பத்திலும் பழுதான அரிசி அரச செயலகத்தினால் வழங்கப்படமாட்டாது என்பதனை உறுதிப்படுத்துகின்றேன் - என்று அரச அதிபர் கூறினார்.

தென்மராட்சி மக்கள் வலிகாமத்திற்கு இடம்பெயர்ந்து வந்தபோது அவர்கள் சரியான முறையில் கவனிக்கப்படவில்லை என்று அரச சார்பற்ற நிறுவனங்களில் பிரதிநிதிகள் அரச அதிபரிடம் கவலை தெரிவித்தனர்.

இணையப் பிரதிநிதிகள் இச் சந்திப்பின் போது மேலும் கூறியதாவது:-

தென்மராட்சி பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து வந்த மக்களுக்கு வழி காட்டுவதிலும், அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்வதிலும் சில கிராமசேவை உத்தியோகத்தர்கள் அசிரத்தையுடன் செயற்பட்டனர்.

இடம்பெயர்ந்து வந்து பாடசாலைகளில் தங்கியிருந்தவர்களை அங்கிருந்து வெளியேற்றும் முயற்சிகளில் சில கிராம முயற்சிகளில் சில கிராம சேவை உத்தியோகத்தர்கள் ஈடுபட்டனர்.

இடம்பெயர்ந்தவர்கள் தமது பதிவுகளை மேற்கொள்வதற்காக கிராம சேவை உத்தியோகத்தர்களைத் தேடி அலைந்து திரிந்ததுடன் நிவாரணத்திற்காக கிராம சேவை உத்தியோகத்தர்களின் அலுவலகத்துக்கும் பிரதேசசெயலர் அலுவலகத்துக்கும் மக்கள் இன்று கூட அலைந்து கொண்டிருக்கின்றனர்.

சில கிராம சேவை உத்தியோகத்தர்களை அவர்களது அலுவலகங்களில் காணமுடியாதிருந்தது. உதாரணமாக உரும்பிராய்ப் பகுதிக்கு கைதடியிலிருந்து மக்கள் வந்து சேர்ந்தபொழுது அங்குள்ள கிராம சேவை உத்தியோகத்தர்களைக் காணவில்லை. பொதுமக்கள் சிலரே இடம்பெயர்ந்து வந்த மக்களுக்கு உணவுப் பொருள்களை வழங்கினார்கள். ஒரு வாரத்தின் பின்னரே கிராம சேவை உத்தியோகத்தர்களைச் சந்திக்க முடிந்தது.

இவ்வாறு பல இடங்களிலும் கிராம சேவை உத்தியோகத்தர்களின் செயற்பாடுகள் இருந்ததை அவதானிக்க முடிந்தது.

நிவாரண விநியோகத்தின் போது முகாம்களில் வசிக்கும் மக்களுக்கு மட்டுமே சில அரச சார்பற்ற நிறுவனங்கள் உதவிப் பொருள்களை வழங்கி வருகின்றன. உறவினர், நண்பர்கள் வீடுகளிலுள்ள மக்களுக்கு உதவுவதற்கு இவர்கள் பின்னடிக்கிறார்கள்.

தற்போதைய நிலையில் கீழ் மட்டத்திலுள்ள மக்களின் குறைபாடுகள் தீர்க்கப்பட வேண்டும். இதற்கு முறைப்பாடுகளை ஆராயும் மக்கள் "கமிட்டி ஒன்று அமைக்கப்பட வேண்டும்.

இடம்பெயர்ந்த மக்கள் குறித்து அரசாங்கம் எவ்வித கரிசனையும் காட்டவில்லை. கவலையும் தெரிவிக்கவில்லை.

இப்படி அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் அரச அதிபரிடம் சுட்டிக் காட்டினர்.

# கறுப்பு ஜூலை தினத்தில் தாக்குதலுக்குத் திட்டம்

## பாதுகாப்பு வட்டாரங்கள் தகவல்

கொழும்பு,ஜூலை15

கறுப்பு ஜூலை தினமான எதிர்வரும் 23 ஆம் திகதி கொழும்பில் பெரும் தாக்குதலை நடத்த புலிகள் திட்டமிட்டிருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன என்று பாதுகாப்பு வட்டாரங்களை மேற் கோள்காட்டி 'லக்பிம' சிங்களப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இத்தாக்குதலுக்காக பலரை புலிகள கொழும்புக்கு அனுப்பியுள்ளனர் எனவும் -

அத்தகைய புலிச் சந்தேக நபர் ஒருவர் கடந்த வாரம் கொழும்பில் கைதுசெய்யப்பட்டதை அடுத்து புலிகளின் தாக்குதல் திட்டம் வெளிவந்ததாகவும் -

பாதுகாப்பு வட்டாரங்கள் மேலும் தெரிவித்ததாக அப்பத்திரிகை குறிப்பிட்டுள்ளது. (உ)

# அரசமைப்பு தீர்வுத் திட்டம் பற்றி ஐ.தே.கவுடனும் ஈ.பி.டி.பி. பேசும்

உத்தேச தீர்வுத்திட்டம் தொடர்பான அரசமைப்புச் சீர்திருத்தங்கள் குறித்து ஐக்கிய தேசியக் கட்சியுடனும் விரிவான பேச்சு நடத்துவதற்கு ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி) முயன்று வருவதாகக் கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

உத்தேச தீர்வுத் திட்டத்தில் தமிழர்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யும் விடயங்களை சேர்க்க முடியாமற் போனதற்கு அரசுத் தரப்பும் ஐ.தே.கட்சியும் மாறிமாறி குற்றம் சுமத்தி வருவதால் - இவ்வாறம் அரசுத் தரப்புடன் பேச்சு நடத்திய ஈ.பி.டி.பி. குழு அடுத்து ஐ.தே.கட்சியையும் சந்தித்து பேச்சு நடத்த முடிவு செய்திருப்பதாகவும்-

அரசு - ஐ.தே.க.- தமிழ்க் கட்சிகள் என்று முத்தரப்புப் பேச்சுக்கு முன்னர் ஐ.தே.க - ஈ.பி.டி.பி. பேச்சுக்கள் நடைபெற விருப்பதாகவும்-

கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன. (உ)

# 2 லட்சத்து 13ஆயிரம் மாணவர் ஜீ.சீ.ஈ. பரீட்சைக்கு தோற்றுவர்

கொழும்பு,ஜூலை15

எதிர்வரும் 31ஆம் திகதி ஆரம்பமாகவிருக்கும் ஜீ.சீ.ஈ. உயர்தரப்பரீட்சையில் இரண்டு லட்சத்து 13ஆயிரத்து 440 மாணவர்கள் தோற்றவிருக்கின்றனர் என்று பரீட்சை ஆணையாளர்நாயகம் ஏ.எம்.ஆ.பி.அமரக்கோன் தெரிவித்தார்.

இந்தப் பரீட்சையில் ஒரு லட்சத்து 77 ஆயிரத்து 759 பேர் பாடசாலைப் பரீட்சார்த்திகளாகவும் -

35 ஆயிரத்து 681 பேர் தனிப்பட்ட பரீட்சார்த்திகளாகவும் தோற்றுகின்றனர்.

நாடு முழுவதும் ஆயிரத்து 446 பரீட்சை நிலையங்கள் அமைக்கப்படவிருக்கின்றன.

யாழ்.மாவட்டத்தில் 65 பரீட்சை நிலையங்கள் நிறுவப்படும்.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் இராணுவக் கட்டுபாடற்ற பகுதிகளில் இப்பரீட்சையை ஒரே நேரத்தில் நடத்த ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் -

வடமாகாணத்துக்கு விசேட இணைப்பாளர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் - பரீட்சை ஆணையாளர் தெரிவித்தார்.

இம்முறை பரீட்சை நிலையங்களில் கடமையாற்றுவோரின் பணிகள் கண்காணிக்கப்படும். அவர்கள் தமது பணிகளில் இருந்து தவறும் இடத்தில் சேவையில் இருந்து நீக்கப்படுவர் எனவும் அவர் தெரிவித்தார். (ஐ-3-8)

## உயர் நீதிமன்றில் மனு

இந்தோனேசியாவுக்கான இலங்கைத் தூதுவராக நியமனம் செய்யப்பட்டுள்ள முன்னாள் வெளிநாட்டு அமைச்சின் பேச்சாளரும் அந்த அமைச்சின் வெகுசன தொடர்புப் பணிப்பாளருமான ரவிநாத் ஆரியசிங்க தம்மைப் பணிப்பாளர் பதவியிலிருந்து நீக்கியதை ஆட்சேபித்து உயர் நீதிமன்றத்தில் மனு ஒன்றைத் தாக்கல் செய்தார். அந்த மனுவை உயர் நீதிமன்றம் விசாரணைக்கு ஏற்றுக் கொண்டுள்ளது.

ஆனையிறவு முகாம் வீழ்ச்சி குறித்து முந்திக்கொண்டு இவர் அறிக்கை வெளியிட்டதே இப் பதவியிலிருந்து இவர் நீக்கப்பட்டதற்குக் காரணம் என்று செய்திகள் அடிபட்டது குறிப்பிடத்தக்கது. (உ-7)

## இடைக்கால தடை நீடிப்பு

கொழும்பு,ஜூலை15

ஈ.பி.ஆர்.எல்.எவ்விலிருந்து தம்மை வெளியேற்றியதை ஆட்சேபித்து வரதராஜப்பெருமாள் தாக்கல் செய்த வழக்கில், தன் இறுதித் தீர்ப்பு வரும் வரை தனது இடைக் காலத் தடையை நீடித்து கொழும்பு மாவட்ட நீதிமன்றம் நேற்று முன்தினம் உத்தரவிட்டது.

கட்சியிலிருந்து வரதராஜப் பெருமாளை அதன் பொதுச் செயலாளர் சுரேஷ் பிரேமச்சந்திரனும் ஏனைய மத்திய குழு உறுப்பினர்களும் வெளியேற்றியதை இடைநிறுத்தி வழங்கப்பட்ட இடைக்கால உத்தரவையே நீதிமன்றம் தற்போது நீடித்துள்ளது. (உ-4-7)

## கூட்டம்

யாழ்ப்பாணம்,ஜூலை15

தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் நாளை காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

எனவே சகல அங்கத்தவர்களையும் சமூகமளிக்குமாறு செயலாளர் கேட்டுள்ளார்.(ஐ-10)

### உதய வாக்கு

விலங்கைக விட மனிதன் விளங்குவதற்குக் காரணமாவது அறம்; மக்களினத்தை உண்மையாக உயர்த்த வல்லது அறம்.

- மு.வ-

## வாசகர் உள்ளம்

### உண்மைக்காகக் குரல் கொடுத்தாய்

உதயனின் உதயத்திற்காய் காத்திருந்த பல்லாயிரக்கணக்கான வாசகர்களில் நானும் ஒருவன் என்ற முறையில் உரிமையுடன் இந்த மடலை எழுதுகிறேன்.

*"எது நடந்ததோ; அது*
*நன்றாகவே நடந்தது*
*எது நடக்கிறதோ; அது*
*நன்றாகவே நடக்கிறது*
*எது நடக்க இருக்கிறதோ,*
*அதுவும் நன்றாகவே*
*நடக்கும்"*

கீதையின் இந்த வாக்கிற்கு ஏற்ப உதயன் தடைசெய்யப்பட்ட விடயத்திலும் "எது நடந்ததோ" அது நன்றாகவே நடந்துள்ளது. உதயனின் உதய வரலாற்றிலே உதயன் தடை செய்யப்பட்டது ஒரு மைல் கல் என்றே கூறவேண்டும். உதயனை எந்த நோக்கத்திற்காகத் தடை செய்தார்களோ அதற்கு முற்றிலும் மாறான விளைவுகளே ஏற்பட்டன. உதயனைத் தடைசெய்வதிலும் அதனைத் தொடர்ந்து அத் தடையை நீடிப்பதிலும் தமிழ்க் குழு ஒன்று மும்முரமாகச் செயற்பட்டது வெளிச்சத்துக்கு வந்துள்ளது. உண்மைகள் உறங்குவதில்லை. உறங்குவது போல் காணப்பட்டாலும் அவை ஒரு போது விழித்துக்கொள்ளும் யாழ்.குடாநாட்டைச் திறந்த வெளிச் சிறைச்சாலை என தமிழ்க் கட்சிகள் வர்ணித்த வேளை, செம்மணியில் எம் தமிழ் உறவுகள் கொன்றொழிக்கப்பட்ட போதும் "உண்மைக்கும் நீதிக்கும் உத்தமனாய்" குரல் கொடுத்தது எம் "உதயன்" ஒன்றே.

ராகிங் கொடுரத்துக்கு எதிராக "உதயன்" பத்திரிகை செயலாற்றியமை அனைவருக்கும் தெரிந்ததே. ராகிங் கொடுரத்தால் இடம் பெயர்ந்த யாழ். மாணவர்கள் பாதிக்கப்பட்டார்கள். அவ்வேளையில் அதனால் ஏற்பட்ட கோஷ்டி மோதல்களை தட்டிக் கேட்க யாரும் முன்வரவில்லை. அவ்வேளையில் "உதயன்" இல்லாததால் எழுந்த விளைவுகளை எழுத்தில் வடிக்க முடியாது.

உதயனைத் தடைசெய்ததன் மூலமே உதயனின் உண்மை நிலையை உலகறியச் செய்தார்கள்.

கற்புக்குக் காவலில்லாத தேசமதில் உதயனின் மக்கள் சேவை தொடரவும், சிறக்கவும் இறைவனை வேண்டுகின்றேன்.

*"வாழ்க உதயன்;*
*வளர்க தமிழ்"*

**வண்ணை க.பிரசாந்தன்**

### உண்மைகளைத் தருபவன்

எம் இனத்தின்
உரிமைக் குரலாய் தினம்
வலம்வந்த
உதயனே!
உன் உதயத்தை
மறைத்தாலும் உண்மைகளைத்
தாங்கும் உனது உண்மையான
குரலுக்கு என்றுமில்லை மறைவு
உன் உதயமாய்
மலர்ந்திடும் இவ் வுலகத்தின்
உண்மைகளைத்
தமிழினத்தின் தன்மைகளை
நடுவு நிலை தவறாத
எமக்குத் தரும் தயாபரனே
உதயமாய் மக்கள் வாழ்வில்
உதயமான உதயனே!
என்றும் வளர்க! வாழ்க!

**இ.தாசன்**
கோண்டாவில்.

### நாளை

ஆடி 1
ஞாயிற்றுக்கிழமை
*திதி:* பூரணை
முன்னிரவு 7.43 வரை
*நட்சத்திரம் :* பூராடம்
பிற்பகல் 12.39 வரை
*சுபநேரம் :* 9.00 - 10.30
*ராகுகாலம் :* 4.30 - 6.00
இவை பகலுக்கும் இரவுக்கும் பழையநேரப்படி

# சிங்களவர் இழந்த உரிமைகளை மீட்பதே

# 'சிங்கள உறுமய' கட்சியின் நோக்கமாம்!

## அதன் செயலாளர் தரும் கொள்கை விளக்கம்

**சிறிலங்காவின் அரசியல் களத்தில் புதிதாக இறங்கியுள்ள அரசியல் கட்சி 'சிங்கள உறுமய' ஆகும்.**

**தற்போதைய அரசியல் களத்திற்கு இக்கட்சி எவ்வளவு தூரம் பொருத்தமானது? அதன் கொள்கைகள் யாவை?- இவை குறித்து அக்கட்சியின் செயலாளர் திலக் கருணரத்ன விளக்குகிறார்.**

**நோர்வே நாட்டின் தேசியக் கொடியை எரித்ததை நியாயப்படுத்துகிறார் திலக் கருணரத்ன.**

**12-07-2000 திகதிய 'லங்காதீப' பத்திரிகையில் வெளியான கட்டுரையின் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம்.**

'சிங்கள உறுமய' என்னும் அரசியல் கட்சி உருவாக்கப்பட்டு ஒரு சில மாதங்களே ஆகின்றன. ஆனால் இதற்கிடையில் நாடெங்கும் பல்வேறு கூட்டங்களை கூட்டி அந்தக் கட்சி தனது நோக்கங்களை மக்களுக்கு விளக்கியுள்ளது.

நாடு சுதந்திரமடைந்த பின்னர் இந்த நாட்டை ஆண்ட இரு முக்கிய அரசியல் கட்சிகள் அவற்றினுடைய ஆட்சிக் காலங்களில் இந்த நாட்டுக்கு இழைத்த தீங்குகள் குறித்து மக்களுக்கு எடுத்துரைப்பதே சிங்கள உறுமய அமைப்பின் முக்கிய நோக்கமாகும். இந்த இரு முக்கிய அரசியற் கட்சிகளுக்கு மேலதிகமாக மூன்றாவது சக்தியாக விளங்கும் ஜே.வி.பியினர் இந்த நாட்டிற்கு இழைத்துள்ள தீமைகளையும் மக்களுக்கு எடுத்து விளக்குவதும் எமது நோக்கமாகும். அதே நேரம் நாட்டின் அபிவிருத்தி தொடர்பாக எமது அமைப்பால் தயாரிக்கப்பட்டுள்ள மாற்றுத் திட்டங்களை மக்களின் முன்வைப்பதற்கும் நடவடிக்கை எடுத்து வருகிறோம். விமர்சனங்களை மாத்திரமின்றி மாற்றீடுகளையும் நாம் முன்வைப்பதால் யதார்த்தத்தைப் புரிந்து கொள்ள மக்களுக்கு இலகுவாக இருக்கும்.

சிங்கள உறுமயவின் ஒரே ஒரு நோக்கம் சிங்கள மக்களின் உரிமைகளை வென்றெடுப்பது மாத்திரமன்று. எமது பிரதான நோக்கங்களில் ஒன்று, சிங்களவர்கள் இழந்த - சிங்களவர்களிடமிருந்து பறிக்கப்பட்ட - உரிமைகளை மீண்டும் பாதுகாப்பாக சிங்களவர்களுக்குப் பெற்றுக்கொடுப்பதாகும்.

ஆதியில் இந்த நாடு இந்திய ஆக்கிரமிப்புக்குள் இருந்தது. இருப்பினும் எமது உரிமைகள் பெரிய அளவில் பாதிக்கப்படவில்லை. போர்த்துக்கீசர் 1505 இல் இந்நாட்டுக்கு வந்ததைத் தொடர்ந்து சிங்கள மக்களின் பாரம்பரிய உரிமைகளுக்கு பெருமளவில் பாதிப்புக்கள் ஏற்பட்டன. அன்றிலிருந்து காலத்திற்குக் காலம் பறிக்கப்பட்ட சிங்களவர்களின் உரிமைகள் குறித்து மக்களுக்கு விளக்குவதுடன் மீண்டும் அவ்வாறான சம்பவங்கள் இடம்பெறாவண்ணம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவும் வேண்டும்.

### சிங்களவர்கள் சிறுபான்மையினர்

அறுநூறு கோடி மக்களைக் கொண்ட இந்த உலகில் சிங்களவர்கள் ஆக ஒரு கோடி 40 இலட்சம் பேர் மாத்திரமே உள்ளனர். இவ்வாறு மிகவும் சிறுபான்மையினரான சிங்கள மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பது இலகுவான விடயமல்ல. இதற்காக நாம் எமது அதி உச்ச ஆற்றலைப் பயன்படுத்தி மிகவும் பொறுப்புடன் செயற்பட்டு வருகிறோம். எமது செயற்பாடுகளை நடைமுறைச் சாத்தியமற்றவை என வாதிடுவோரும் உள்ளனர்; எம்மை ஏளனம் செய்வோரும் உள்ளனர். எனினும் அவ்வாறானவர்களுக்கு நாங்கள் வாய்மூலம் பதிலளிக்க விரும்பவில்லை. எமது செயற்பாடுகள் அவர்களுக்கும் பதிலாக அமையும்.

### இனவாதிகள் என பெயர் சூட்டுவதேன்?

நியூசிலாந்தில் 'மவோரி' இன மக்களும் அவுஸ்திரேலியாவில் 'அபொறிஜீன்ஸ்' இனமக்களும் அமெரிக்காவில் இந்திய இனமக்களும் அந்தந்த நாடுகளின் ஆட்சியாளர்களிடமிருந்து சிற்சில சலுகைகளைப் பெற்றதற்குக் காரணம் அந்த மக்கள் அமைப்பு ரீதியாகத் திரம்படச் செயற்பட்டதே ஆகும். அவ்வாறே சிங்கள மக்களின் இழக்கப்பட்ட உரிமைகளையும் வென்றெடுக்க முடியும். இருப்பினும் அது இலகுவான விடயம் அல்ல என்பதை நாம் அறிவோம்.

இந்நாட்டின் முக்கிய இரு அரசியல் கட்சிகளிலும் நான் உறுப்பினராக இருந்துள்ளேன்.

அந்தக் கட்சிகளின் செயற்பாடுகள் ஊடாக சிங்கள மக்களின் உரிமைகளை வென்றெடுக்கும் முயற்சிகளில் ஈடுபட்டேன்.

1980களில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைப்பீடத்தில் இந்த நாட்டின் தேசிய உணர்வுகளைத் கொண்டவர்கள் இருந்தனர். அக்கட்சியின் தலைமையை சந்திரிகா பண்டாரநாயக்கா பொறுப்பேற்றதையடுத்து அக்கட்சியினரிடையே இருந்து வந்த தேசிய உணர்வுகள் அற்றுப் போயின. கட்சியின் தலைமையைச் சந்திரிகா ஏற்றதைத் தொடர்ந்து அவரது கொள்கைகளைக் கொண்டவர்களின் வருகையால் சி.ல.சு.கட்சியில் இருந்து வந்த தேசிய உணர்வுகள் குன்றத் தொடங்கின. அதே நேரம் பதிலாக சர்வதேச உணர்வுகள் வளரத் தொடங்கின. சி.ல.சு.கட்சிக்குள் இருந்து கொண்டே சிங்கள மக்களின் உரிமைக்காகப் போராடும் குழுவை ஆரம்பித்தேன்.

நாட்டின் வடபகுதியின் நிர்வாகத்தை பிரபாகரனிடம் 10 ஆண்டுகளுக்கு ஒப்படைக்க வேண்டும் என அமைச்சர் தொண்டமான் தெரிவித்த கருத்துக் காரணமாக சிங்களவர்களுக்கென அமைப்பு ஒன்றை உருவாக்க வேண்டிய தேவை உருவானது. இன்று பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசில் அமைச்சராக விளங்கும் தி.மு. ஜயரத்னாவே அன்று எமது உபதலைவராக விளங்கினார். பிற்காலத்தில் பலர் நாட்டை விட ஆட்சி அதிகாரமே முக்கியமானதெனக் கருதி சிங்கள உறுமய எண்ணங்களை மறந்தனர். சிங்கள மக்களுக்காகக் குரல் கொடுத்த காரணத்தினால் சிங்கள மக்களுக்காக அமைக்கப்பட்ட சி.ல.சு.கட்சியில் இருந்து நான் நீக்கப்பட்டேன். இது மிகவும் துர்ப்பாக்கியமான சம்பவமாகும். சிங்கள மக்கள் தொடர்பான அக்கட்சியின் கொள்கைப்பிடிப்பு எத்தகையது என அறிந்து கொள்வதற்கு இது நல்ல உதாரணமாகும். எவ்வாறாயினும் எனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை நீதிமன்றம் பாதுகாத்தது. என்னைக் கட்சியில் இருந்து நீக்கும் தீர்மானத்தை முன்வைத்தவர் சந்திரிகாவே ஆவார்.

இதற்கிடையில் ஐ.தே.கட்சியில் நான் உறுப்பினரானேன். அன்று அக்கட்சியின் தலைவராக விளங்கிய ஜனாதிபதி டி.பி.விஜேதுங்கா வடக்கு - கிழக்கு நிலைமைகள் பற்றித் தெளிவாக அறிந்திருந்தார். அவர் தெளிவான கொள்கையையும் கொண்டிருந்தார்.

வடக்கு - கிழக்குப் பிரச்சினை என்பது பயங்கரவாதப் பிரச்சினை என்பதே எனது கருத்தாக இருந்தது. இக்கருத்தையே காமினி திஸநாயகாவும் கொண்டிருந்தார்.

எவ்வாறாயினும் மிகவும் குறுகிய காலத்திற்குள் மக்களின் வாக்குகள் மூலம் நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டேன்.

ஆனால் ஐ.தே.கட்சியின் தலைமைப் பதவியை ரணில் விக்கிரமசிங்க ஏற்றதைத் தொடர்ந்து அக்கட்சிக்குள் பல பிரச்சினைகள் உருவாகின. அவர் வடக்கு - கிழக்குப் பிரச்சினை தொடர்பாக தெளிவான கருத்தைக் கொண்டிருக்கவில்லை. ரணில் விக்கிரமசிங்காவை கட்சி உறுப்பினர்களை விட வெளிச் சக்திகளே ஆட்டிப்படைக்கின்றன. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சக்திகளின் தாளத்திற்கு அவர் ஆடுகிறார். அவர் அடிக்கடி வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொண்டுவருகிறார். ஒவ்வொரு முறை அவர் நாடு திரும்புகிறபோது அவரது கொள்கைகளில் சில, முற்றிலுமாக மாறுபட்டிருப்பதை நான் அவதானித்துள்ளேன். வடக்கு - கிழக்கு இடைக்கால நிர்வாக சபை பற்றிய எண்ணம் ரணில் விக்கிரமசிங்கவுக்கு இவ்வாறுதான் உருவானது. இடைக்கால நிர்வாக சபையை என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது என நான் ரணிலுக்குத் தெரிவித்திருந்தேன்.

நான் எந்தக் கட்சியில் உறுப்பினராக இருந்தாலும் அக்கட்சியை



திலக் கருணரத்ன

உடைத்து - மாற்றுக் குழுவை உருவாக்கி - லாபமடைய முயற்சிக்கவில்லை. சரத் அமுனுகம மற்றும் நந்தா மத்தியு போன்று செயற்படுவது (கட்சி தாவுதல்) எனது நோக்கமல்ல. எனது தேர்தல் தொகுதி மக்களுக்கு எனது செ கைகளை எடுத்து விளக்கியது. . ரணில் விக்கிரமசிங்கவின் நல்லுறவை முறிக்காத விதத்தில் அவருடன் உரையாடிய பின்னரே, ஐ.தே. கட்சியிலிருந்து விலகினேன்.

எனது அரசியல், கொள்கையின் அடிப்படையில் அமைந்தது; அது பதவி ஆசையைக் கொண்டதல்ல. எனவேதான் நான் எனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்துள்ளேன்.

### காமினி ஜயசூரியாவின் பொறுப்பு என்னிடம்

சிங்கள மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் பொறுப்பை இதற்கு முன்னர் காலஞ்சென்ற காமினி ஜயசூரியா என்னிடம் ஒப்படைக்க முன்வந்தார். இப்போது அந்தப் பொறுப்பு என்னிடம் ஒப்படைக்கப்பட்டது குறித்து மனத் திருப்தியடைகிறேன்.

சிங்கள உறுமய கட்சியானது ஓர் இனவாதக் கட்சியா என்ற கேள்வி தற்போது எழுந்துள்ளது. இது குறித்து விமர்சனங்களை மேற்கொள்வோரும் உள்ளனர். எனினும் சிங்கள உறுமயக் கட்சி ஓர் இனவாதக் கட்சி அல்ல என்பதை நான் இங்கு தெளிவாகக் கூறி வைக்க விரும்புகிறேன்.

இந்த நாட்டை ஒரே தாயகம் என ஏற்றுக்கொள்பவர்கள் எந்தத் தராதரத்தை உடையவர்களாயினும் எமது அமைப்பில் அவர்களுக்கு இடமுண்டு. இனத்தால் வேறுபட்டவர்களுக்கும் எமது அமைப்பின் கதவு திறந்திருக்கும். எமது அமைப்பின் யாப்பில் இது தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. இந்த நாட்டின் சனத்தொகையில் ஐந்தில் நான்கு பங்கினரான சிங்கள மக்களின் இழக்கப்பட்ட - பறிக்கப்பட்ட - உரிமைகளை மீண்டும் பெறுவதற்காகவே நாங்கள் முயற்சி செய்வோம்; செயற்படுவோம்.

தனது இனத்தின் நன்மைக்காக வேறு இனத்திற்குத் தீங்கிழைப்பதே இனவாதமாகும். ஆனால் எமது கட்சி வேறு எந்த இனத்திற்கும் தீங்குகளை - அநீதிகளை - மேற்கொள்ள முயற்சிக்கவில்லை. வேறு எவராவது இவ்வாறான செயலில் ஈடுபடமுற்படின் அவ்வாறன முயற்சிகளைத் தடுப்பதே சிங்கள உறுமய கட்சியின் நோக்கமாகும்.

### இனவாதிகள் அல்லர் நாம்

சிங்கள அடிப்படைவாதிகள் போல் நாம் செயற்பட முயல்வதாக மற்றும் சிலர் தெரிவிக்கின்றனர். இதில் எதுவித உண்மையுமில்லை.

தற்போதுள்ள அரசியல் சூழ்நிலையில் நோர்வே நாட்டு தூதரகத்திற்கு ஊர்வலமாகச் சென்று அந்த நாட்டின் தேசியக் கொடியைத் தீயிட்டது நாங்கள் மேற்கொண்ட பெருந்தவறு எனச்சிலர் குற்றம் சாட்டுகின்றனர். இருப்பினும் நோர்வே அரசுமீது எமது எதிர்ப்பை வெளியிடும் விதத்தில் அந்நாட்டின் தேசிக் கொடியைத் தீயிட எங்களுக்கு உரிமையுண்டு. 'குடாபொல' என்ற பௌத்த மதகுரு ஆங்கிலேயரின் தேசியக் கொடியைக் கிழித்து காலால் மிதித்த சம்பவம் வரலாற்றில் இடம்பெற்றுள்ளது. எனவே எமது நாட்டை - இனத்தை - தாரை வார்த்துக் கொடுக்க முயலும் நோர்வே நாட்டின் தேசியக் கொடியை தீயிட்டது இனவாதமாகாது. இது இனப்பற்றுக் கொண்ட நடவடிக்கையாகும். உலகிலுள்ள நாடுகளில் பல அமெரிக்கத் தேசியக் கொடியைத் தீயிட்டுள்ளன. கியூபா நாட்டில் மேற் கொள்ளப்படும் அத்தனை அமெரிக்க எதிர்ப்பு நடவடிக்கைகளின் போதும் அமெரிக்கத் தேசியக் கொடி தீயிடப்படுகிறது. இருப்பினும் அச்சம்பவங்களை இனவாதம் என எவரும் கூறவில்லையே? இனவாதிகள் என எமக்குக் குறி சுடவேண்டிய தேவை அரசுக்கு இருந்தால் அது குறித்து நாம் கவலைப்படமாட்டோம்.

இவ்வாறான சூழ்நிலையில் நாட்டு மக்களுக்கு அசௌகரியம் ஏற்படும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் பொதுமக்களின் உரிமைகளைப் பேண சிங்கள உறுமய கட்சி அர்ப்பணிப்புடன் செயற்படும். இந்த நாட்டின் பொருளாதார நிலை குறித்துச் சிந்திப்போம். இன்று சாதாரண பொதுமக்கள் வாழ்க்கைச் செலவுச் சுமையால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். இதற்கெல்லாம் காரணம் யுத்தத்திற்காக மேற்கொள்ளப்படும் செலவுகளே என அரசாங்கம் தெரிவிக்கிறது.

எனக்கு பொருளாதாரம் பற்றிய அறிவும் அனுபவமும் உண்டு.

தற்போதைய நிலவரங்களின்படி நாட்டின் பொருளாதாரமும் நடைபெறும் யுத்தமும் அரசின் கட்டுப்பாட்டை மீறியே நடைபெறுகின்றன என்பதே எனது கருத்தாகும்.

அரசாங்கம் ஆட்சிக்கு வந்த போது என்ன கூறியது? திறந்த பொருளாதாரத்திற்கு வழிவகுப்போம் எனக் கூறினர். ஏழைகளின் துயர் துடைப்போம்; யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவோம் என்றெல்லாம் அரசு கூறியது.

இப்போது நடைபெறுகின்ற சம்பவங்கள் இவைதானா? இல்லையே. இவற்றிற்கு நேர் எதிர்மாறான நடவடிக்கைகளையே அரசு மேற்கொள்கின்றது.

இந்த அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படும் ஒருசில தனியார்மயமாக்கும் நடவடிக்கைகள் பொது மக்களைப் பெரிதும் பாதிக்கின்றன. ஐந்து ஆண்டுகளுக்கு உரிமத்தை வழங்கியே சமையல் காஸ் நிறுவனம் தனியார்மயமாக்கப்பட்டது. அத்துடன் கடந்த ஆண்டு அந்த நிறுவனத்திற்கு நாடாளுமன்றத்தின் ஒப்புதலின்றி 40 கோடி ரூபா வழங்கப்பட்டுள்ளது. இவற்றையெல்லாம் கவனத்தில் எடுக்கும்போது விடயங்கள் பற்றிய போதிய அறிவோ அல்லது அனுபவமோ இல்லாத ஒரு சிலர் இந்த விடயங்களைக் கையாள்வது தெளிவாகிறது.

பொருளாதார நடவடிக்கைகளை அரசு உரிய முறையில் மேற்கொள்ளவில்லை. அதேபோல் யுத்தமும் ஒரு சிலருக்கு லாபத்தை ஈட்டித் தரும் வியாபாரமாக மாறியுள்ளது.

முன்னர் ஆட்சியில் இருந்த ஐ.தே.கட்சியைப் போலவே இந்த அரசுக்கும் வடக்கில் யுத்தத்தில் வெற்றிபெற வேண்டிய தேவையில்லை. ஒரு சிலர் யுத்தத்தின் மூலமாக லாபமீட்ட முற்படுகின்றனர். அவர்களுக்கு யுத்தம் ஒன்றே இலக்காக உள்ளது. இவற்றை விட அரசுக்கும் ஒரு தற்காலிக லாபம் கிடைக்கிறது. யுதத்திற்கு பெருமளவான நிதியைச் செலவிட நேர்கிறது. இதனால் மக்கள் மீது மேலும் மேலும் வரிச்சுமைகள் ஏற்றப்படுகின்றன. வினைத்திறனற்ற அரசின் செயற்பாடுகளால் ஏற்படும் பாதிப்புகள் அனைத்தும் யுத்தமென்ற பெயரில் மக்கள் மீது சுமத்தப்படுகின்றன.

நாட்டைபற்றி - இனத்தைப்பற்றி - எப்போதும் சிந்திப்பவர்கள் யுத்தத்திற்குத் தங்களால் முடிந்தளவு ஒத்துழைப்பை வழங்குகின்றனர்; சம்பளத்தைப் பாதுகாப்பு நிதிக்கு வழங்குகின்றனர். மேலும் பல்வேறு வழிகளில் ஒத்துழைப்புகளை வழங்குகின்றனர்.

பொருளாதாரம் பற்றி நன்கு அறிந்தவன் என்ற வகையில் உண்மைநிலை என்னவெனில் யுத்தத்திற்கான செலவின் 63 சதவீதத்தை மக்கள் பாதுகாப்பு வரி என்ற பெயரிலும் தேசிய பாதுகாப்பு நிதியத்தின் ஊடாகவும் நேரடியாகச் செலுத்துகின்றனர். எஞ்சியுள்ள 37 சதவீதமான யுத்தச் செலவிற்காக மக்களின் மீது இவ்வளவு தூரம் மென்மேலும் வரிச்சுமையை ஏற்றுவது நியாயமற்றதாகும். இந்த உண்மைகள் மக்களுக்கு மூடி மறைக்கப்படுகின்றன. யுத்தத்திற்கான செலவின் 63 சதவீதத்தை மக்கள் வரி மூலமாக நேரடியாக வழங்கும்போது எஞ்சியுள்ள செலவுக்காக மக்களின் அத்தியாவசியப் பொருள்களின் விலைகளை ஏற்றுவது மிகவும் தவறான செயலாகும். வரவு செலவுத் திட்டத்தில் தெரிவிக்கப்பட்ட வருமானங்களில் இருந்தே யுத்தத்திற்கான செலவின் 100 சதவீதத்தையும் செலவிடுவதாக அரசு கூறுகிறது. இது சுத்தப் பொய். யுத்தத்திற்கான செலவு, யுத்தத்திற்கான செலவு என அரசு ஒப்பாரி வைக்கிறது. இதில் உண்மை எதுவுமில்லை. இது அரசாங்கத்தை நடத்துவதற்கு முற்றிலுமாக அரசால் மேற் கொள்ளப்படும் பிரச்சாரமே ஆகும். ஆனையிறவு போன்ற முகாம்கள் வீழ்ந்த வேளையில் அவை குறித்து நாங்கள் துக்கப்பட்டபோது யுத்தத்தால் லாபம் பெறும் ஒரு சிலர் சிரித்து மகிழ்ந்ததையும் நான் அறிவேன்.

தற்போதுள்ள பொருளாதார மற்றும் தேசிய உற்பத்திகளுக்கு பாதிப்புக்கள் ஏற்பட வாய்ப்புக்கள் உள்ளன. தற்போதுள்ள இலங்கை - இந்திய ஒப்பந்தம் மற்றும் உலக அமைப்புக்களின் தேவைகளின்படி செயற்படின் இன்னும் இரு வருடங்களில் நாட்டின் வருமானம் பூஜ்ஜியத்தை எட்டும். அப்போது தேசிய உற்பத்திகளை மேற்கொள்வதிலும் பார்க்க இந்தியாவில் இருந்தோ அல்லது வேறுநாடுகளில் இருந்தோ பொருள்களை இறக்குமதி செய்து விற்பது லாபமாக அமையும். இந்தியா மற்றும் சிறிலங்காவுக்கான வர்த்தக இடைவெளி 380 கோடியாகும். தினமும் இந்த இடைவெளி இந்தியாவுக்குச் சாதகமான விதத்தில் வளரும். இவைபற்றி எமது நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்கள் அளிக்கும் விளக்கங்கள் அதிர்ச்சியூட்டுகின்ற நகைச்சுவையாக அமைகின்றன. பொருளாதார நடவடிக்கைகள் உரிய முறையில் மேற்கொள்ளப்படாத காரணத்தாலும் யுத்தத்தை உரிய முறையில் நடத்தாததாலும் வாழ்க்கைச் செலவுகள் அதிகரித்துள்ளன.

பொருளாதாரம் மற்றும் பாதுகாப்பு ஆகிய இரு விடயங்களையும் எடுத்துக்கொண்டால் இந்த இரண்டிலுமே ஊழல்கள் மலிந்துள் ளன எனக்குறிப்பிட விரும்புகிறேன். எனவேதான் சிங்கள உறுமய கட்சி மக்களின் நன்மைக்காக விசேட பொருளாதாரக் கொள்கைகளைக் கடைப்பிடிப்பது எனத் தீர்மானித்

(7ஆம் பக்கம் பார்க்க)

| | | | |
|---|---|---|---|
| | சனி | வி | சூ புத. செ ரா |
| | இராசிச்சக்கரம் | | வெ. |
| | | | |
| கே சந். | | | |

*மாற்றம்:- மூலம் - நட்ஷத்திரம் - தனுசு இராசியில் சந்திரன் நிற்கும்.*

*இனப்பிரச்சினைப் பேச்சுவார்த்தைகள் மெல்ல மெல்ல நகரும். இந்தியா - நோர்வே - பிரிட்டன் போன்ற நாடுகள் ஓர் இணக்கத் திற்க வர முயற்சிக்கும். இந்தியாவில் பல புதிய பிரச்சினைகளை மறைமுகமாக கிளப்பி விட அதன் எதிரிகள் எத்தனிப்பர். இயற்கை செயற்கை அழிவுகள் நடக்கும். கிழக்கு - தென்கிழக்கு நாடுகளின் அரசியலில் மேற்குலக நாடுகள் புகுந்து சாணக்கிய - பொருளாதார நிலை குலைவுகளை மெல்ல மெல்லச் செய்ய இடமுண்டு எனக் கிரக நிலைகள் காட்டுகின்றன.*

# இந்த வார இராசி பலன்

**15-07-2000 இலிருந்து 21-07-2000 வரை**

# சோதிட சஞ்சீவி

## மேடம்

சமூகத்தில் வாழவழியில்லாதவர்கள் - தொழில் இல்லாதவர்கள் ஏமாற்றம் அடைகின்றனர். விரக்தி அடைகின்றனர். இவர்களால் பல பிரச்சினைகள் உருவாகின்றன. சமூகப் பிரச்சினைகள் தனி மனித வாழ்விலும் தாக்கத்தை ஏற்படுத்தலாம் அல்லவா? தொழில்ஸ்தானத்தில் உங்களுக்கு ஏற்படும் மாற்றங்களால் யோசனைகள் அதிகரிக்கும். யுத்தச் சூழ்நிலை உங்களையும் பாதிக்கச் செய்யலாம். எதற்கும் புத்திசாதுரியமாகச் செயற்படவும். பேச்சுச் சுதந்திரத்தால் பலரைப் பாதிப்படையச் செய்வீர்கள். பொருள் வரவு சுமாராக இருக்கும். வசதிகள் குறைவு என எண்ணாதீர்கள். வசதிகளை நீங்களே ஏற்படுத்தும் வல்லமை ஏற்படும். நரம்பு-தோல் பாதிப்பு வரலாம், சுகச்சிந்தனை அதிகம். மாற்றங்கள் சிலருக்கு நன்மைகளைக் கொடுக்கும். அரசியல், கோயில், எண்ணெய், கமிஷன், உலோகம், மரம் போன்ற துறைகள் சார்ந்த தொழில் செய்பவர்கள் இலாபங்கள் அடைவார்கள்.

*அதிர்ஷ்ட நாள்:-ஞாயிறு,வெள்ளி*

## இடபம்

எமது தரம் கல்வியில், பண்பாட்டில், நாம் நடந்து செல்லும் சமூகச் சுற்றாடல் வாழ்க்கைப் பாதையில் பலவித கணிப்புக்களை எமக்குத் தரவல்லது. உங்களுக்கும் உங்கள் தொழில்ஸ்தானத்தில் உயர்வுகள், அனுபவங்களை இக்காலத்தில் அடைவீர்கள். சகோதரங்களுடன் கூடிப்புதிய திட்டங்கள் போடுவீர்கள். வீடு, வாகனங்களால் இலாபங்கள் கிடைக்கும். அரச உதவிகள் கிடைக்கும். இனஜனங்களால் நன்மைகள் ஏற்படும். எதிரிகளை இனம் கண்டு எதிர்க்கும் சந்தர்ப்பங்கள் ஏற்படும். எந்தப்பிரச்சினைகளையும் எதிர்கொண்டு போராடி வெற்றி அடைவீர்கள். நெஞ்சு வருத்தம், களைப்பு, சலிப்பு, கைகால் பிடிப்பு, சளித்தொல்லை என்பன கொடுக்கும். சட்டத்துறை, மருந்துத் துறை, நிர்வாகத்துறை போன்ற துறையினர்கள் நன்மைகள் அடைவார்கள்.

*அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி.*

## மிதுனம்

வேகமான செயற்பாடு இருந்தாலும் மனம் விவேகமான சிந்தனைகளால் சிலருக்கு நன்மைகள் தரும். அது போல உங்களுக்கும் பல அனுபவங்கள் தொழில்ஸ்தானத்தில் ஏற்பட இடமுண்டு. குடும்பத்தினருக்காக அங்கும் இங்கும் அலுவல்களைப் பார்த்து நிறைவேற்றத் துடித்துக் கொண்டிருப்பீர்கள். எதிர்ப்பாலார்களின் உதவிகள் கிடைக்கும். அரசியல், அரசு அதிகாரிகளால் உதவிகள் கிடைக்க இடம் உண்டு. சிலருக்கு திடீர் யாத்திரைகள் அனுகூலமாகும். வாய்வுத் தொல்லை, நெஞ்சழுத்தம், வாதம் வரலாம். நீதி, போதனை, வியாபாரம் போன்ற துறைகள் தொடர்பானவர்கள் அதிக இலாபம் அடைவார்கள்.

*அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி*

## கடகம்

எங்கே நிம்மதி? அங்கே ஒரு இடத்தைத் தேடி மனம் அலையும். தொழில்ஸ்தானத்தில் ஆதாயங்கள் தேடுவீர்கள். குடும்பச் செலவுகளால் கலக்கம் ஏற்படும். சகோதரங்களுக்கு எதிர்ப்புத் தெரிவிப்பீர்கள். இடமாற்றங்கள் துன்பம் தரும். நண்பர்களை நம்பாதீர்கள். ஏமாற்றிவிட்டுச் சென்று விடுவார்கள். தாய் வழியினரிடமிருந்து நற்செய்திகள் வந்து சேரும். பல்நோ, சலவருத்தம், வாய்வு, மலச்சிக்கல்களைத் தந்து வேதனைப்படச் செய்யும். மனிதர்களை நம்புவதை விட தெய்வத்தை நம்பும் காலமாகும். அரசியல், கலை, செய்தி, கடல், போக்குவரத்து போன்ற துறைகள் தொடர்பானவர்கள் அதிக இலாபங்கள் அடைவார்கள்.

*அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி.*

## சிங்கம்

எமது தகுதியை கொண்டு போராடி இடைவிடாத பயிற்சி, அறிவு, கல்வித்தரம், பொருள்நிலை என்பனவற்றைப் படிப்படியாகப் பெறுவதிலிருந்தே நிலைத்து நிற்கும் நிலை ஒருவருக்கு ஏற்படுகின்றது என்பதை நீங்கள் அறியாதவரல்லர். படிப்படியான தெளிவு நிலை தொழில்ஸ்தானத்தில் ஏற்பட்டாலும் உங்களைச் சிலர் உதாசீனம் செய்வதனை நீங்கள் பொறுக்கமாட்டீர்கள். நல்லவர்கள், உண்மை உழைப்பாளிகள் குறித்து பொறாமையால் வேண்டாதனவற்றைச் சொல்லித்திரியும் பலர் இந்தச் சமுதாயத்தில் இருப்பது சகஜமாகும். இந்த நிலை இன்று நேற்று ஏற்பட்டதல்ல. வாத உளைவு, வாய்வு வருத்தங்கள், வயிற்று நோ, தலையிடி என்பன ஏற்படலாம். நிர்வாகம், விவசாயம், மருத்துவம், போதனை போன்ற துறைகள் தொடர்பானவர்கள் பல நன்மைகள் அடைவார்கள்.

*அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி*

## கன்னி

பாடுபட்டுத் தேடும் பொருளை லஞ்சம் கொடுத்துச் சிலர் பிடுங்கி எடுக்கும் பொழுது ஏற்படும் மன எரிவு -நிச்சயம் பறிப்பவனைப் பாதிக்காமல் விடாது. இந்த அனுபவங்கள், செய்திகள் உங்களை மனம் நோகச் செய்யும் என நீங்கள் தொழில்ஸ்தானத்தில் உணரும் காலமாகும். உங்களை அழகுபடுத்துவதில் அதிக நேரகாலத்தைச் செலவு செய்வீர்கள். இடமாற்றங்களால் பொருள் இழப்பு ஏற்படலாம். சலவருத்தம், வாதஉளைவு, பித்த வருத்தங்கள் என்பன கொடுக்க இடமுண்டு. நீதித்துறை, ஆசிரியத் துறை, மருந்துத்துறை, விவசாயத் துறையினர்களுக்கு பல முன்னேற்றகர நன்மைகள் ஏற்பட இடமுண்டு.

*அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி.*

## துலாம்

வரவு பத்தாயிரம் செலவு இருபதாயிரம் ஆக இருந்தால் என்ன செய்வது? பொருளால் வேதனை தான் வரச் செய்யும். உங்கள் தொழிற்பழுவால் அடிக்கடி உணர்ச்சிவசப்பட்டு கோபிக்காமல் பொறுமையாக இருக்க முயலுங்கள். தொழிற்ஸ்தானத்தில் போட்டியான உலகத்தைக் காண்பீர்கள். எதிர்ப்பாலொருடன் நிதானமாக இருக்கவும். வேண்டாத குறைகுற்றங்களைச் சிலர் பரப்ப முற்படுவார்கள். எதையும் துணிவுடன் தட்டிக் கேட்டு அதனால் குறை கேட்பீர்கள். வாகனச் செலவுகள் அதிகரிக்கும். உடல் களைப்பு, நரம்புச் சோர்வு, தலை சம்பந்தமான வியாதிகள் வரலாம். ஓய்வு முக்கியமாகும். அரசியல் துறை, நிர்வாகத்துறை, பொதுத் தொண்டுச்சேவை, கமிஷன் வேலைகள் போன்றவற்றில் தொடர்புடையோர்கள் இலாபங்கள் அடைவார்கள்.

*அதிர்ஷ்ட நாள்:-ஞாயிறு,வெள்ளி.*

## விருச்சிகம்

சத்தியதர்மத்திற்கு சோதனைகள் வரத்தான் செய்யும். உண்மைகளை எத்தனை மனிதர்கள் மனச்சாட்சிப்படி ஏற்றுக்கொள்ளுகிறார்கள் எனச் சிந்திக்கிறீர்களா? தொழில் ஸ்தானத்தில் குறைகுற்றங்கள் மலிந்து காணப்படும். அயலவர்களை நம்பாதீர்கள். கூட இருப்பவர்களால் மன வேதனைகள் ஏற்படச் செய்யும். சாஸ்த்திரம், வேதங்களில் ஆராய்ச்சிகள் செய்ய மனம் ஏகும். இனஜனத் தொடர்பு ஏற்படும். புதிய திட்டங்களால் - பெரியவர்களின் நன்மதிப்பைப் பெறச் சந்தர்ப்பங்கள் ஏற்படும். வயிறு, சிரசு நாசி, சம்பந்தமான வருத்தங்கள் கொடுக்கலாம். சட்டத்துறை, பாதுகாப்புத்துறை, ஆசிரியத்துறையினர்களுக்கு பொருள் வரவுகள், முன்னேற்றங்கள் ஏற்படும்.

*அதிர்ஷ்ட நாள்:-ஞாயிறு,வெள்ளி.*

## தனுசு

எப்பொழுது அமைதிவரும்? சனி மாற்றம் வந்ததன் பின்பா? வியாழ மாற்றத்தால் சண்டை அதிகரித்து விட்டதா? என அடிக்கடி குரல் கொடுத்தபடி இருப்பீர்கள். எதற்கும் அமைதியை காத்து இறை நாமத்தைச் சொன்னபடி இருப்பது நன்று. மெல்ல மெல்லத்தான் எந்த அலுவலும் நடக்கும் காலமாகும். சனீஸ்வரன் 3.8.2000க்குப் பின்பு நீதி வழங்காமல் விடமாட்டான். ஆனால் நீங்கள் தொழில்ஸ்தானத்தில் அமைதியுடன் செயற்படவேண்டும். அல்லது வீண்பகைமை வரலாம். வயிற்றுநோ, வாய்வுத் தொல்லை, நெஞ்செரிவு, கைகால் பிடிப்பு என்பன வரத்தான் செய்யும். அரசதுறை, செய்தித் துறை, இசைக்கலைத்துறை, கமிஷன் வியாபாரம், போக்குவரத்துத் துறை, அச்சுத்துறை போன்ற துறையினர்கள் இலாபங்கள், முன்னேற்றங்கள் அடைவார்கள்.

*அதிர்ஷ்ட நாள்:-ஞாயிறு,வெள்ளி.*

## மகரம்

நல்லதைப் பார்த்து உண்மையைச் சிந்தித்து நன்மை செய்வதில் இருக்க முயலுங்கள். அதனால் தொழில் ஸ்தானத்தில் உங்களுக்கு நன்மைகள் ஏற்படும். அல்லது துன்பந்தான் மிஞ்சும். சந்தர்ப்பங்களைச் சரிவரச் செயற்படுத்துவதில் சாமர்த்தியமாக இருந்தாலும் விதியின் செயற்பாட்டை எவரும் மிஞ்சி விட முடியாது அல்லவா? தொழில்ஸ்தானத்தில் ஊக்கம் தேவையாகும். நாலுமனிதர்களைப் பார்த்து தலையாட்டினால் மட்டும் காரியங்களை சாதிக்க முடியாது. அறிவு, ஆற்றல், முயற்சி என்பன இருக்க வேண்டாமா? சகோதரங்களுடன் விவாதம் வரும். பல், நரம்பு, வயிற்றில் கிருமி, கை கால் பிடிப்பு என்பன வரலாம். அரசியல்துறை, பத்திரிகை, அச்சுத்துறை, போக்குவரத்து, தரகுத்துறையினர் இலாபங்கள் அடைவார்கள்.

*அதிர்ஷ்ட நாள்:- ஞாயிறு.*

## கும்பம்

வருங்காலத் திட்டங்களை பொறுமையாகச் சிந்தியுங்கள். அல்லது வீண் கஷ்டங்கள் அடைய நேரிடலாம். தொழில்ஸ்தானத்தில் தாமதப்பலன்கள், ஏமாற்றங்கள் அடைய இடமுண்டு. புதிய திட்டங்களால் பொருள் இழப்புகள், செலவுகள் ஏற்பட இடமுண்டு. கொடுக்கல் வாங்கலில் எவரையும் நம்பாதீர்கள். குடுபத்தினரின் நன்மைகளுக்காக ஓடியாடித்திரிவீர்கள். எதிர்பாலாருடன் நிதானமாக நடந்து வாருங்கள். எந்த விஷயத்திலும் ஆராய்ச்சி மனம் அடிக்கடி அலை மோதியபடி இருக்கும். வயிற்று வருத்தம், வாய்வுத் தொல்லை, கைகால் சோர்வு, நரம்புநோ அடிக்கடி இருக்கும். போக்குவரத்துத்துறை, அரசியல்துறை, விவசாயத்துறை, கடல்துறை போன்ற துறைகள் தொடர்பானவர்கள் நல்ல இலாபங்களை அடைவார்கள்.

*அதிர்ஷ்ட நாள்:-ஞாயிறு.*

## மீனம்

எதையும் துருவித் துருவி ஆராய்ந்தபடி இருப்பீர்கள். ஆயினும் என்ன? கண்டபடி வெளியில் கருத்தைச் சொல்லமுடியாத காலம் அல்லவா? எனவே நாவடக்கம் காக்க வேண்டும் என்பதை மறவாதீர்கள். தொழில் ஸ்தானத்தில் மேலதிகாரிகள், நல்லவர்களின் கருத்துக்களால் தூண்டப்பட்டபடி இருப்பீர்கள். உதவிகள் கிடைக்கும். குடும்பத்தினரின் நன்மைக்காக அங்கும் இங்கும் ஓடியாடித்திரிவீர்கள். எதிலும் எதிர்நீச்சலடித்து இருநிலை மனக்கருத்துக்கள் வட்டமிட்டபடி இருக்கும். அடிக்கடிமறதி, வயிற்று வருத்தங்கள், உஷ்ணபீடைகள், சளித்தொல்லை என்பன கொடுக்கும். பேச்சால் எதையும் சாதிக்க முயலுவார்கள். பொதுத் தொண்டால்புகழ்வரும். கடல்துறை, போக்குவரத்துத்துறை, வியாபாரத்துறை, குருத்துறை போன்ற துறையினர்கள் நல்ல இலாபம் அடைவார்கள்.

*அதிர்ஷ்ட நாள்:- ஞாயிறு*

# மகாதேவா ஜோதிடம்

---

# சிறுகதைப் படைப்பாளிகளில் நாவேந்தன் முதன்மையானவர்

## யாழ். இலக்கிய வட்டம் அஞ்சலி

ஈழத்தின் மூத்த எழுத்தாளர்களில் நாவேந்தன் முதன்மையானவர். அவரது சிறுகதைகள் மக்களது சமூக உறவுகள் சார்ந்த யதார்த்தப் படைப்புகளாகும்.

எழுத்தாளர் நாவேந்தனின் (தம்பிராசா திருநாவுக்கரசு) மறைவை ஒட்டி யாழ்.இலக்கிய வட்டம் விடுத்துள்ள அஞ்சலிக் குறிப்பில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் விவரம் வருமாறு :-

ஈழத்தின் பிரபல மூத்த எழுத்தாளர் நாவேந்தன் அவர்கள் மரணம் அடைந்த செய்தி மிகுந்த துயரத்தைத் தருகிறது. ஈழத்தின் மூத்த சிறுகதை எழுத்தாளர்களில் நாவேந்தன் முதன்மையானவர். அவருடைய சிறுகதைகள் மக்களது சமூக உறவுகள் சார்ந்த யதார்த்தப் படைப்புகளாகும். 1948 களில் இருந்து தொடர்ந்து அவர் எழுதிய சிறுகதைகள் 'வாழ்வு', 'தெய்வமகன்' என்னும் சிறுகதைத் தொகுதிகளாக வெளிவந்தன. அவருடைய புனைகதை ஆற்றல்களை இச்சிறுகதை தொகுதிகள் இன்றும் இனம் காட்டுகின்றன. நாவேந்தன் சிறுகதை ஆசிரியராக மட்டுமன்றி சிறந்த பேச்சார்களில் ஒருவராகவும் பல்துறை சார்ந்த கட்டுரைகளைப் படைக்கும் ஆற்றல் வாய்ந்தவராகவும் விளங்கியுள்ளார். அவருடைய சடுதியான மறைவு ஈழத்து இலக்கிய உலகிற்குப் பெரும் ஈடு செய்ய முடியாத இழப்பாகுமென யாழ். இலக்கிய வட்டம் கருதுகிறது. - என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

(ஐ)

## பழைய மாணவர் சங்கக் கூட்டம்

யாழ்ப்பாணம்,ஜூலை15

அச்சுவேலி மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கத்தின் பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

(ஐ-10)

---

# சிங்களவர் இழந்த உரிமை.......

(6ஆம் பக்கத் தொடர்ச்சி)

துள்ளது. இது தொடர்பான திட்டங்கள் எமது பொருளாதார வல்லுநர்களால் தயாரிக்கப்பட்டு வருகின்றன. எமது கருத்துப்படி உரிய முகாமைத்துவத்துடன் யுத்தத்தை மேற்கொண்டால் தற்போது ஏற்படும் யுத்தச் செலவில் 40 சதவீதத்தை நேரடியாகக் குறைக்க முடியும்.

## தேர்தல் நடப்பது சந்தேகமே

நாங்கள் எதிர்வரும் பொதுத் தேர்தலை எதிர்பார்த்த வண்ணமுள்ளோம். அரசமைப்பின்படி அடுத்த மாதம் நடாளுமன்றம் கலைக்கப்பட வேண்டும். இருப்பினும் நாளாந்தம் அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவுகளின் மத்தியில் அரசு தேர்தலை நடத்துமா என்ற சந்தேகம் எழுகிறது. நாடாளுமன்ற உறுப்பினர்களும் அமைச்சர்களும் தங்களது சம்பளங்களை அதிகரித்துள்ளனர். மேலும் பல வசதிகளைப் பெற்றுக் கொண்டனர். இருப்பினும் அரச ஊழியர்களுக்கும் தனியார் துறை ஊழியர்களுக்கும் எதுவித நிவாரணங்களும் வழங்கப்படவில்லை.

இதற்கிடையில் வடக்கு - கிழக்கு இடைக்கால நிர்வாக சபையை உருவாக்குவ[illegible]ன்ற முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இதற்கு தென்பகுதிமக்கள் ஒருபோதும் தமது விருப்பத்தை தெரிவிப்பார்கள் என நான் கருதவில்லை. இவ்வாறான அனைத்துச் சாதகபாதகங்களை மதிப்பீடு செய்யும் போது அரசு தேர்தலை நடத்தாது என்றே தோன்றுகிறது. இது எம்மிடையே பெரும் சந்தேகத்தை உருவாக்கியுள்ளது. சில வேளைகளில் அரசமைப்பு ரீதியாக கிடைத்துள்ள சட்ட நுணுக்கங்களையும் பயன்படுத்தி தேர்தலை அரசு ஒத்திவைக்க முயலக்கூடும் எவ்வாறாயினும் எதிர் வரும் தேர்தல் ஒரு கேள்விக்குறியாகவே அமைந்துள்ளது.

பின்னணிகள் எதையாவது உருவாக்கி தேர்தலை ஒத்திவைக்க அரசு முயற்சி செய்யுமாயின் மக்களுக்கு யதார்த்த நிலையைத் தெளிவுபடுத்த பெரிய அளவில் ஆர்பாட்டங்களை நடத்துவோம் என்பதை கூறிக்கொள்ள விரும்புகிறேன். இது தொடர்பான ஆரம்பக் கலந்துரையாடல்களை தற்போதே மேற்கொண்டு வருகிறோம். தேர்தலை ஒத்திவைப்பது ஒரு பயங்கரமான நிலைப்பாடாகும். ஜனநாயக வழிமுறைகளில் மக்கள் தமது விருப்பத்தை வெளிப்படுத்த இருக்கும் ஒரேயொரு வழி தேர்தலாகும். இதற்கு முன்னரும் இந்நாட்டில் பொதுத் தேர்தலை ஒத்திவைத்தவர்களும் இந்நாட்டில் உள்ளனர். இருப்பினும் அவை துன்பியலான - தீய அரசியல் அனுபவங்களுடனேயே - முடிவுக்கு வந்தன என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

எதிர்வரும் பொதுத்தேர்தலில் சிங்கள உறுமயக் கட்சி போட்டியிடுவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறது. யாழ்ப்பாணம். மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களைத் தவிர்ந்த ஏனைய அனைத்து மாவட்டங்களிலும் நாங்கள் தேர்தலில் வேட்பாளர்களை நிறுத்துவது எனத் தீர்மானித்துள்ளோம். இந்தத் தேர்தலில் வெற்றி பெற்று நாட்டின் ஆட்சி அதிகாரத்தை நாங்கள் கைப்பற்றுவோம் என நான் கூறவில்லை. இருப்பினும் எதிரணி ஆசனங்களைப் பெற்று முக்கிய எதிர்கட்சியாக விளங்குவோம். இதன் மூலம் அரசுக்கு அழுத்தம் கொடுத்து சிங்கள மக்களின் உரிமைகளை வென்றெடுக்க முயல்வோம். எமது இந்தப் பயணமானது சொகுசற்ற - கற்கள், முட்கள் நிறைந்த - பயணம் என்பதை நாம் அறிவோம். என்றாலும் பரவாயில்லை. எமது நோக்கங்களை நோக்கி பரிசுத்தமான பாதையில் வழிநடப்போம். குறுகிய அரசியல் இலாபங்களைப் பெற விரும்பினால் முக்கிய அரசியல் கட்சிகளுடன் இணைந்து செயற்பட முடியும். ஆனால் எமது நோக்கங்கள் நீண்டகால அடிப்படையில் அமைந்தவை. எமது நோக்கங்களை அடையும் ஆற்றல் எம்மிடமுள்ளது.

# சீ-நோர் தொழிற்சாலையை இயக்கும் பணிகள் ஸ்தம்பிதம்

## முகாமையாளர் ராஜினாமா

குருநகரில் உள்ள சீ-நோர் வலைத் தொழிற்சாலையில் வலை உற்பத்தியை உரியகாலத்தில் மேற்கொள்ள முடியாமையினால் இந்தத் தொழிற்சாலையின் பிரதிப் பொது முகாமையாளர் சி.கஜமுகலிங்கம் தனது பதவியை இராஜினாமாச் செய்துள்ளார்.

கடந்தகால அனர்த்தங்களினால் செயலிழந்திருந்த இத் தொழிற்சாலையைப் புனரமைப்புச் செய்து மீள இயங்க வைப்பதற்கு பல முயற்சிகளை அவர் மேற்கொண்டார்.

தொழிற்சாலை இயங்குவதற்கான சகல வேலைகளும் பூர்த்தியடைந்துள்ள நிலையில் கொழும்பிலிருந்து இரசாயனப் பொருள்களை அனுப்புவதற்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

இரசாயனப் பொருள்களை யாழ்ப்பாணம் எடுத்துவருவதற்கு பாதுகாப்பு அமைச்சின் அனுமதி மறுக்கப்பட்டது. கடந்த பல மாதங்களாக இந்த அனுமதி கிடைக்கும் என எதிர்பார்த்த அவர் இறுதியில் தனது பதவியை இராஜினாமாச் செய்துள்ளார்.

"எனது பதவிக்காலத்தில் இத் தொழிற்சாலையை தொடர்ந்து நடத்துவதற்கான இரசாயனப் பொருளைப் பெற்றுத்தரமுடியாமல் போய் விட்டது" என்று கவலை தெரிவித்து ஊழியருக்கு சுற்றறிக்கை ஒன்றையும் அவர் அனுப்பிவைத்தார். (ஐ-5-9)

## முதன்மைஆசிரியருக்கு

தென்மராட்சிக் கல்வி வலயத்தைச் சேர்ந்த சகல முதன்மை ஆசிரியர்களையும் எதிர்வரும் 19ஆம் திகதி புதன்கிழமை காலை பத்து மணிக்கு நெல்லியடி ம.ம. வித்தியாலயத்தில் இயங்கும் தென்மராட்சி வலயக் கல்விப் பணிமனைக்கு வருகைதருமாறு கல்விப்பணிப்பாளா அறிவித்துள்ளார்.(ஐ-152)

## பதிற்கடமை புரியும் அதிபர்களுக்கு

வலிகாமம்தெற்கு,ஜூலை15

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளைச் சேர்ந்த பதிற் கடமை புரியும் அதிபர்களை நிரந்தரமாக்கல் தொடர்பாக விவரங்களைப் பெற வேண்டியுள்ளதால் சம்பந்தப்பட்ட சகல பதிற் கடமை புரியும் தென்மராட்சி வலய அதிபர்களையும் நெல்லியடி ம.ம.வித்தியாலயத்தில் இயங்கும் தென்மராட்சிக் கல்வி வலயத்திற்கு எதிர் வரும் 17ஆம் திகதி திங்கட்கிழமை பகல் பத்துமணிக்கு வருகை தருமாறும் -

கடமைபுரியும் அதிபர் நியமனத்துக்கான கடிதத்தைக் கொண்டு வரமாறும் -

தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (ஐ-152)

## லயன்ஸ் கழக பதவியேற்பு

வலிகாமம்தெற்கு,ஜூலை15

மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகத்தினரின் 2000 - 2001 ஆம் ஆண்டுக்குரிய புதிய உறுப்பினர்கள் பதவியேற்பு வைபவம் நாளை ஞாயிற்றுக்கிழமை 11 மணிக்கு நவாலிதெற்கில் உள்ள அன்னை இல்லத்தில் நடைபெற உள்ளது.

லயன்ஸ் கழக புதிய தலைவராக லயன் ஏ.இருதயநாதன், செயலாளராக பி.சிவகுமார் மற்றும் 14 பணியாளர்சபை உறுப்பினர்கள் அன்றைய தினம் பதவியேற்க உள்ளனர்.

இவ்விழாவில் லயன்ஸ்கழக பிராந்திய தலைவர் வைத்திய கலாநிதி லயன்.வி.தியாகராசாவும், சீமாட்டி ரஞ்சிதமலரும் பிரதம விருந்தினர்களாக கலந்து கொள்கின்றனர். (ஐ-152)

## பட்டதாரிகள் சங்கக் கூட்டம்

யாழ்ப்பாணம்,ஜூலை15

யாழ். மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தின் பொதுக் கூட்டம் நாளை காலை 11மணிக்கு யாழ. நகரில் உள்ள டி.எம்.ஐ கீல்வி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

புதிய தலைவர் தெரிவு குறித்தும் வேலைவாய்ப்பு விடயங்கள் பற்றியும் ஆராயப்படவுள்ளதால் அனைவரையும் கடந்த 96ஆம் 97ஆம் ஆண்டுகளில் பட்டதாரிக வரவு செலவுத் திட்டப்பணியகத்தால் நடத்தப்பட்ட நேர்முகப்பரீட்சையின் இலக்கத்துடன் சமூகமளிக்குமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-10)

## குருபூர்ணிமா விழா

யாழ்ப்பாணம்,ஜூலை15

நாளை ஞாயிற்றுக்கிழமை யாழ். திவ்விய ஜீவன சங்க மண்டபத்தில் காலை 9 மணியளவில் சங்கத் தலைவர் க. கனகரட்ணம் தலைமையில் குருபூர்ணிமா விழா நடைபெறும்.

அன்றையதினம் திருவடிப் பூசை, அபிஷேகம் பிரார்த்தனை என்பனவும் இடம்பெறும். (ஐ)

* * *

யாழ்ப்பாணம்,ஜூலை15

பருத்தித்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தின் ஏற்பாட்டில் குருபூர்ணிமா தின நிகழ்ச்சி நாளை ஞாயிறு முற்பகல் 11 மணிக்கு நடைபெறவுள்ளது. (ஐ)


## வாடிக்கையாளர்களுக்கு ஒரு வேண்டுகோள்

சாவகச்சேரி ராஜன் ஆபரணமாளிகை நெல்லியடி பிரதானவீதி லவ்லி றெக்கோடிங் பார் அண்மையில் இயங்குகிறது என்பதை வாடிக்கையாளர்க்கு அறியத் தருகின்றோம்.

*பிரதான வீதி,*
*நெல்லியடி.* (76460)

உரிமையாளர்,
சபா. நடராசா.


# நன்றி நவிலலும் சபிண்டீகரண அழைப்பும்



மண்ணில் 18 - 06 - 1933

விண்ணில் 16 - 06 - 2000

## ஆறுமுகம் - குமரகுரு

(ஓய்வு பெற்ற அதிபர்)

எமது குடும்பத் தலைவர் ஆறுமுகம் குமரகுரு (ஓய்வு பெற்ற அதிபர்) இறைபதமெய்தியதை அறிந்து எமது துயரில் கலந்து கொண்டு எமக்கு ஆறுதல கூறிய உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் இரங்கற் செய்தி அனுப்பியவர்களுக்கும், மலர்வளையம் வைத்தோருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு எதிர்வரும 16-07-2000 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு இடம்பெறும் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் அனைவரையும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**மனைவி, பிள்ளைகள்.**

அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி. (76389)

# நீங்காத நினைவில் முதலாம் ஆண்டு



அன்னை மடியில் 08 - 12 - 1949

ஆண்டவன் அடியில் 15 - 07 - 1999

'தொழில்நுட்ப மாமணி'

## அமரர் தம்பித்துரை கமலநாதன்

(இயக்குநர், நொதேண் மோட்டோர் வேக்ஸ் யாழ்ப்பாணம்.)

"அன்பின் திருவுருவே அறிவின் சிகரமே
அழியாது உன்புகழ் அவனியில் நாம்
உள்ளவரை
தொழில் நுட்பமாமணி யென புகழ் பெற்ற
உங்களை
தொழுகின்றோம் நாம் தெய்வமாகக்
கொண்டு
ஓராண்டு சென்றாலும் எம் நெஞ்சில்
நீங்காது
நிலைத்திருக்கின்றீர் நித்தியமாக எப்
உள்ளத்தில்"

உங்களது தொழில் நுட்பத் திறமையினால் அகிலமெங்கும் புகழ்பரப்பிய மோட்டோர் இயந்திர உதிரிப் பாகங்கள் புதிப்பித்தல், றிபோறிங், றிசிலீவிங், கிறாங் சாவ்ற், றிகிறைன்டிங், கெட்பேசிங் முதலிய வேலைகள் தொடர்ந்தும் (44) 250, ஸ்ரான்லி வீதியில் உள்ள நொதேண் மோட்டோர் வேக்ஸ் ஸ்தாபனத்திலும் மிஷன் பாடசாலை வீதி, கோண்டாவில் கிழக்கிலும் நடைபெறுகின்றன.

**நொதேண் மோட்டோர் வேக்ஸ் ஸ்தாபனத்தினர்.**

(C/12213)

# ஒன்பதாம் மாத நினைவஞ்சலி



தோற்றம் 22 - 12 - 1939

மறைவு 15 - 10 - 1999

அமரர்

## ஆறுமுகம் கமலநாதன்

(உதவிக் கல்விப்பணிப்பாளர், வலிகாமம் கல்வி வலயம்.)

ஆறுதல் சொல்ல யாரிருந்தென்ன - உங்கள் ஆருயிர் அன்புக்கு ஈடாகுமா? தேறுதல் சொல்லத் தெய்வம் வந்தென்ன உங்கள் திருமுகம் பார்ப்பது போலகுமா? மாதங்கள் ஒன்பது ஓடி மறைந்தாலும் ஆறிடுமோ எம்துயர் ஐயா! நேரிய வழிகாட்டி வாழ்வினில் ஒளியூட்டிய சீரிய தெய்வமே நீங்கள் மறைந்தாலும் உங்கள் நினைவுகளை நெஞ்சில் சுமந்து நிற்கின்றோம் எங்கள் அன்புத் தெய்வமே. ஆறாத் துயரில் எம்மை ஆழ்த்திவிட்டு மீளாத்துயில் கொண்டாலும் உங்கள் நினைவு எங்களை விட்டு என்றென்றும் நீங்காது. தனக்கென வாழாது பிறர்க்கென வாழ்வதில நிறைவுகண்ட எந்தையே அடிபணிந்த இறையடியை இவரேற்ற போது படிகிடந்து புலம்புகின்றோம் இன்றைய நன்னாளில்.

உங்கள் ஆத்ம சாந்திக்காக என்றென்றும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

என்றென்றும் உங்கள் பிரிவால் துயருறும்

**அன்பு மனைவி,**
**மருமகன் (சந்திரன்),**
**மாமா, மச்சான், மச்சாள்மார்,**
**சகலன்மார், பெறாமக்கள**

கொக்குவில் மேற்கு,
கொக்குவில். (76397)


கோப்பி சுவைஞர்களின் விடாப்பிடியான வேண்டுகோளுக்கிணங்க -

**மீண்டும்...**



# பென்கபே



* உடனடிக் கோப்பிக் கலவை *

உண்மையான பிரேசில் கோப்பியின் சுவையோடு உயர்ந்த தரத்திற்கான பத்தாவது கோல்டன் ஐரோப்பிய விருது பெற்ற 'பென்கபே' கோப்பி குறிப்பிட்டளவே வந்துள்ளது.

வாங்குவதற்கு முந்துங்கள்

## அருண் ஸ்போட்ஸ் ஸ்பொட்

***347, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.***

(C/12215)

# வன்னிக்கு தாராளமாகப் பணம் கொண்டு செல்ல அனுமதியுங்கள்!

## கூட்டணி கோரிக்கை

கொழும்பு, ஜூலை 15

''வன்னிப் பகுதிக்கு கட்டுப்பாடின்றி பொதுமக்கள் பணத்தினைக் கொண்டு செல்ல அனுமதிக்க வேண்டும்.''

இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணியின் உபதலைவர் வி. ஆனந்தசங்கரி கேட்டுள்ளார்.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சந்திரானந்த டி. சில்வாவுக்கு அவர் கடந்த புதன்கிழமை எழுதியுள்ள கடிதம் ஒன்றிலேயே இந்த வேண்டுகோளை ஆனந்தசங்கரி விடுத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

வன்னிப்பகுதியில் அத்தியாவசியப் பொருள்களுக்கு கடும் தட்டுப்பாடு நிலவி வருவதால் பொருள்களின் விலைகள் அதிகமாகக் காணப்படுகின்றன. இதனால் அப்பகுதி மக்களுக்கு அதிகளவு பணம் தேவைப்படுகின்றது. ஆனால் வன்னிப்பகுதி செல்லும் மக்கள் 10 ஆயிரம் ரூபா மட்டுமே கொண்டு செல்ல முடியும் என படையினர் உத்தரவிட்டுள்ளனர். இதனால் மக்கள் பெரும் கஷ்டங்களை அனுபவிக்க வேண்டியநிலை காணப்படுகின்றது. எனவே போதியளவு பணத்தை பொது மக்கள் வன்னிக்கு எடுத்துச் செல்ல அனுமதிக்குமாறு படையினருக்கு உத்தரவிட வேண்டும்.

வன்னிக்குப் பத்தாயிம் ரூபா மட்டுமே கொண்டு செல்ல அனுமதிக்கப்படுகின்றது. ஆனால் வவுனியாவில் இருந்து புதுக்குடியிருப்புச் செல்வதற்கு மட்டும் இத்தொகையில் அரைவாசி தேவைப்படுகின்றது. எனவே பணத்தினைக் கட்டுப்பாடின்றி பொதுமக்கள் கொண்டு செல்ல அனுமதிக்க வேண்டும் — என்று கேட்கப்பட்டுள்ளது. (ஐ-க)

# 9 ஆம் ஆண்டு நினைவலைகள்

15 – 07 – 2000



## நெல்லை க. பேரன் குடும்பத்தினர்

மறைவு: 15–07 1991

ஆண்டுகள் ஒன்பது ஆகியதோ?
ஈரவிழி ஆறவில்லை!

தகவல்:
க. பாலேந்திரன்

முருகமூர்த்தி கோயிலடி,
நெல்லியடி,
கரவெட்டி.

(சி/12217)

# 41 ஆம் நாள் நினைவஞ்சலி

அன்னை மடியில்: 13 — 06 — 1922



இறைவன் அடியில்: 05 — 06 — 2000

## அமரர் கபிரியல் அந்தோனிப்பிள்ளை

இவர் திரு. கபிரியல் திருமதி மரியமுத்துவின் அன்பு மகனும் திரு. யோண் பிள்ளை திருமதி றோசம்மாவின் அன்பு மருமனும் திருமதி திரேசாவின் அன்புக்கணவரும் திரு. க. அலெக்சான்டரின் அன்புத் தகப்பனாரும் ஜசிந்தாவின் அன்பு மாமானாரும் மஜிலா, ஜக்சன் யொணாத்தனின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் ஆத்ம இளைப்பாற்றுக்காக 15-07-2000 காலை 7-15 (புதிய நேரம்) புனித திரேசாள் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

அ. திரேசா.

2/1, றக்கா லேன்,
யாழ்ப்பாணம்.

(76456)

# கல்விக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம் ஜூலை 15

இம்மாதம் நடைபெறவுள்ள ஜி. சீ. ஈ (உயர்தர) பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான கல்விக் கருத்தரங்கு நாளை ஞாயிற்றுக்கிழமை தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

தும்பளை நாவலர் விளையாட்டுக்கழகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்தக் கருத்தரங்கில் வணிகக் கல்வி, பொருளியல், இரசாயனவியல் கணக்கீடு, தமிழ் ஆகிய பாடங்கள் நடைபெறவுள்ளன

காலை 7 மணிக்கு ஆரம்பமாகவுள்ள கருத்தரங்கு பிற்பகல் 2 மணி வரை நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-10-171)

# சமய சந்நிதிகளில்

கொழும்புத்துறை, ஜூலை 15

சித்தங்கேணி அருள் மிகு ஸ்ரீ சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீ சிதம்பரேஸ்வரர் தேவஸ்தானத்தின் வருடாந்த மஹா சங்காபிஷேக, திருக்கல்யாண நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும்.

திருக்கல்யாண உற்சவம் மாலை 4 மணிக்கு நடைபெறும் பின்னர் சுவாமி வீதி வலம் வந்து அடியார்களுக்கு அருள்பாலிப்பார்.

(ஐ-30)

★ ★ ★

கொழும்புத்துறை, ஜூலை 15

யாழ். குருநகர் பாங்ஷால் வீதி, பரிசுத்த கார்மேல் மாதாசபை ஆலய வருடாந்த உற்சவம் கடந்த 13ஆம் திகதி வியாழக்கிழமை மாலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 7. 30 மணிக்கு திருநாள் திருப்பலியுடன் உற்சவம் நிறைவுறும்.

(ஐ-30)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜூலை 15

சிறுப்பிட்டி அருள்மிகு தனகலட்டி செல்லப்பிள்ளையார் ஆலய தேர் வெள்ளோட்ட விழாவும் தேர்த் திருவிழாவும் இன்று இடம்பெறவுள்ளது.

காலை 7 மணிக்குத் தேர் வெள்ளோட்டமும் முற்பகல் 11 மணிக்குத் தேர்த் திருவிழாவும் நடைபெறவிருக்கின்றன.

(3)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜூலை 15

அல்லைப்பிட்டி புனித உத்தரிய அன்னை ஆலயத்தின் வருடாந்த திருவிழாவின் இறுதி நிகழ்வாக இன்று 4–30 மணிக்கு நற்கருணை நாதர் ஆராதனையும் நாளை காலை 7-30 மணிக்கு திருநாட் திருப்பலியும் இடம்பெறும்.

(இ)

# மாணவருக்கு கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூலை 15

அண்மைக்கால யுத்த சூழ்நிலையை அடுத்து இடம்பெயர்ந்துள்ள சாவகச்சேரி இந்துக் கல்லூரி தற்பொழுது இணுவில் மத்திய கல்லூரியிலும், நெல்லியடி மத்திய கல்லூரியிலும் இயங்கிவருகிறது.

இக்கல்லூரியின் ஏற்பாட்டில் இணுவில் லயன்ஸ் கழகத்தின் அனுசரணையுடன் இந்த மாதம் நடைபெறவுள்ள ஜி. சீ. ஈ உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கு பொருளியல், வர்த்தகம், இரசாயனவியல், உயிரியல் ஆகிய பாடங்களுக்கான கருத்தரங்குகள் நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளன. (ஐ–10)

# 15 தாதிய உத்தியோகத்தர்களை இங்கேயே நியமிக்கக் கோரிக்கை.

யாழ். போதனா வைத்தியசாலையில் நீண்டகாலமாக நிலவி வரும் தாதியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யு முகமாக யாழ். மாவட்டத்தில் இருந்து வெளி மாவட்ட வைத்தியசாலைகளுக்கு நியமனம் வழங்கப்பட்டுள்ள 15 தாதிய உத்தியோகத்தர்களின் நியமனங்களையும் மாற்றம் செய்யுமாறு யாழ். வைத்தியசாலை நிர்வாகம் சுகாதார அமைச்சைக் கோரியுள்ளது.

தாதிய பயிற்சிக் கல்லூரியில் இருந்து 25 மாணவர்கள் பயிற்சிகளை முடித்துக் கொண்டு கடந்த வாரம் வெளியேறினர். இவர்களில் 10 பேர் யாழ். போதனா வைத்தியசாலைக்கும் 8 பேர் வனிவுயா மாவட்ட வைத்தியசாலைக்கும், 7 பேர் திருகோணமலை மாவட்ட வைத்தியசாலைக்கும் சுகாதார அமைச்சினால் நியமிக்கப்பட்டிருந்தனர்.

யாழ். போதனா வைத்தியசாலைக்கு நியமிக்கப்பட்ட 10 பேரும் தமது பதவிகளைப் பொறுப்பேற்றுள்ளனர். ஏனைய இடங்களுக்கு நியமனம் வழங்கப்பட்டவர்கள் போக்குவரத்து நிலைமை காரணமாக யாழ். போதனா வைத்தியசாலையிலேயே தற்காலிகமாகக் கடமையாற்றி வருகின்றனர்.

எனவே மேற்படி 15 பேரையும் யாழ். போதனா வைத்தியசாலைக்கு நியமிக்குமாறு சுகாதார அமைச்சிடம் கோரப்பட்டுள்ளது.

(ஐ-9-17)

# ஆஸ்பத்திரிச் சிற்றூழியரின் சீருடைகள் மாறுகின்றன

யாழ்ப்பாணம், ஜூலை 15

அரச வைத்தியசாலைகளில் பணிபுரியும் சிற்றூழியர்களின் சீருடைகளில் மாற்றம் கொண்டுவரப்பட்டுள்ளது.

இதற்கான சுற்றறிக்கை ஒன்று கொழும்பு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் சகல மாகாண சுகாதாரச் செயலாளர்கள், மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள், பிரதி மாகாண சுகாதாரசேவைகள் பணிப்பாளர்கள், போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர்கள் அனைவருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அதன்படி வைத்தியசாலைகளில் பணிபுரியும் சகல சிற்றூழியர்களும் சீருடை வழங்கப்பட்டு 14 நாள்களுக்கிடையில் அவற்றை அணியவேண்டும் எனவும் —

இதனை உடனடியாகவே அமுலுக்குக் கொண்டுவரும்படியும் —

உத்தரவிடப்பட்டுள்ளது.

இதற்கமைய இதுவரை காலமும் நடைமுறையில் இருந்துவந்த ஆண் பரிசாரகர்களுக்கான வெள்ளைச்சாரத்திற்குப் பதில் கிறீம் நிறத்தில் நீளக் காற்சட்டையும் வெள்ளை நிறசேட்டுக்குப் பதில் கிறீம் நிறத்தில் வட்டக்கழுத்தும் ஒரு பொக்கெற்றுடனும் கூடிய அரைக் கைச் சேட்டும் அணிந்து அவற்றிற்குமேலாக நாடாவுடனான மேலங்கியும் (Apron) அணிதல் வேண்டும்.

பெண்பரிசாரகர்கள் இதுவரைகாலமும் அணிந்திருந்த வெள்ளைச்சேலை வெள்ளைச் சட்டைக்குப் பதிலாக கிறீம் நிறத்தில் கூர்முனைக்கொலருடன், முன்புறத்தில் இரு பொக்கெற்றுக்களுடன் முழங்கால் வரை நீண்ட கவுண் அணிந்து அதற்கு மேலாக நாடாவுடன் சேர்ந்த மேலங்கியும் அணிதல் வேண்டும்.

சாதாரண ஆண்தொழிலாளர், சுகாதாரச் சுத்திகரிப்பு ஆண் தொழிலாளர் இதுவரை காலமும் அணிந்த வெள்ளைநிறக்கட்டைக் காற்சட்டை, வெள்ளைச்சேர்ட்டுக்கு பதிலாக கிறீம் நிறத்திலான நீளக்காற்சட்டையும் அதே நிறத்தில் வட்டக்கழுத்தும், ஒரு பொக்கெற்றுடனும் கூடிய அரைக்கைச் சேட்டும் அணிதல் வேண்டும். (மேலங்கி அணியத் தேவையில்லை)

சாதாரண பெண்தொழிலாளர், சுகாதார சுத்திகரிப்பு பெண் தொழிலாளர் இதுவரைகாலமும் அணிந்த வெள்ளைச் சேலை, வெள்ளைச் சட்டைக்குப் பதில் கிறீம்நிறத்திலான கூர்முனைக் கொலரும், முன்புறத்தில் 2 பொக்கெற்றுக்களுடன் முழங்கால்வரைநீண்ட கவுண் அணிதல்வேண்டும். மேலங்கி அணியத் தேவையில்லை.

(ஐ)

# தீவகப் பாடசாலைகளில் சிறுவர் முற்றம் நிறுவ நிதி

காரைநகர், ஜூலை 15

தீவக கல்வி வலயத்தில் உள்ள பாடசாலைகளில் 'சிறுவர் முற்றம்' அமைப்பதற்காக பிரமாண அடிப்படையிலான நிதி ஒதுக்கீட்டில் இருந்து நிதி வழங்கப்படவுள்ளது.

தீவுப்பகுதியில் உள்ள இரண்டு பிரதேச சபைகளுக்கு உட்பட்ட 10 பாடசாலைகளில் சிறுவர் முற்றம் அமைக்கப்பட உள்ளது.

இதற்காக தீவகக் கல்விப் பணிப்பாளரிடம் 5 லட்சம் ரூபா விரைவில் கையளிக்கப்பட உள்ளதாக ஈ.பி.டி.பி. அமைப்பின் தீவக அமைப்பாளரும் ஊர்காவற்றுறை பிரதேச சபைத் தலைவருமான ந. மதனராசா தெரிவித்துள்ளார். (இ – 73)

# மரண அறிவித்தல்

## கோணலிங்கம் மாணிக்கம்

எனது தாயார் கோணலிங்கம் மாணிக்கம் 2000 – 07 – 13 ஆம் திகதி வியாழன் காலை மட்டக்களப்பில் இறைபதம் அடைந்து விட்டார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றேன்.

தகவல்:
கோ. புவனேந்திரன்,

கோ. புவனேந்திரன் நகைத் தொழிலகம்,
நிர்மலன் நகைமாளிகை,
கன்னாதிட்டி,
யாழ்ப்பாணம்.

(76493)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## தவறிவிட்டது

குப்பிளான் தெற்கைச் சேர்ந்த செல்வராசா பாமினி ஆகிய எனது தேசிய அ. அட்டை (828260570V), விசேட அ. அட்டை (0906005346) என்பன தாவடிச் சந்திக்கும் சுதுமலைச் சந்திக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து விநாயகர் தொலைத்தொடர்புநிலையம், தாவடிச் சந்தி என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும் (76484)

## விற்பனைக்கு

தமிழ் தட்டச்சு இயந்திரம், ரியூட்டறிக்குரிய வாங்கு மேசைகள், அரியப்பட்ட தென்னம் பலகைகள் உடன் விற்பனைக்கு உண்டு. (தினமும் மாலை 3-6 மணி வரை) தொடர்புகளுக்கு: அ. ராகவன், 3 ஆம் கட்டை, கல்வியங்காடு. (76464)

Sony T.V.M. No 2032, 2030, 2192, National M. No. 2171 யாவும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல. 59, சிவன் புது வீதி, நல்லூர். (76470)

எம்மிடம் பாவனையிலுள்ள மோட்டார் சைக்கிள் (Kawasaki- GTO-110), T v (Sony - 2060), டெக் (LG- புதியது), Amplifier (TOA-50 w) Box, Organ (yamaha -PSR 620) என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு: 32, கல்லூரி ஒழுங்கை, வட்டுக்கோட்டை. (76488)

சிறந்த நிலையிலுள்ள வான் கோழிகள், ஜமுனாபாரி கடா என்பன மலிவு விலையில் விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு: இல. 75, செட்டித் தெரு, நல்லூர். (76498)

## திருத்துதல்

மூக்குக்கண்ணாடி ஒட்டுதல், சகல கமரா வகைகளும், எலக்றோனிக் பிளாஸ் கண், புகைப்படத் துறை சார்ந்த ஏனைய துணைக் கருவிகளும் திருத்திக் கொடுக்கப்படும். சு. நாராயணசாமி, 301, கஸ்தூரியார் வீதி, (மேல் மாடி.) கன்னாதிட்டிச் சந்திக்கருகில், யாழ்ப்பாணம். (76467)

## ஆங்கிலம் விசேடமாக

O/L. பரீட்சையில் Distinction, Credit, G, A.Q. A/L 2002 ஆங்கிலம் அடிப்படை அறிவிலிருந்து (ஆண்டு9, 10 உட்பட) கற்பிக்கப்படும். ஆசிரியர், 85, சிவன் கோவிலடி, சிவன் கோயில் பின்புறம், திருநெல்வேலி. (76390)

## பொய்யாமொழி ஜோதிடம்

கல்வித்தடை, விவாகத்தடை, தொழில் தடை தீர ஆலோசனைகள் வழங்கப்படும். சாதகத்துடன் வரவும். பலன் தவறினால் பணம் திரும்பப் பெறலாம். சனி, செவ்வாயில் ஸ்ரீவீரமாகாளி அம்மன் கோயிலடி., 140, பருத்தித்துறை வீதி, நல்லூரிலும், ஞாயிறு மல்லாகம் பழம்பிள்ளையார் கோயில் மடத்திலும் சந்திக்கலாம். (76451)

## வீடு தேவை

நல்லூர்ப் பகுதி அல்லது யாழ். நகர் வடமேற்குப் பகுதியில் அமையப் பெற்ற நல்ல நிலையிலுள்ள சகல வசதிகளுடனும் கூடிய வீடு வாடகைக்கு அல்லது விற்பனைக்குத் தேவை: நியாயமான வாடகை, விற்பனை குறித்த விவரங்களுடன் தொடர்புகளுக்கு: விள. இல. 1058, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (சி/12203)

## வீடு வாடகைக்கு

நல்லநிலையில், வசதியுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு. தொடர்புகளுக்கு: அ. தியாகராசா இல. 49, பலாலி வீதி, கந்தர்மடம் யாழ்ப்பாணம் எனும் முகவரியில் தொடர்பு கொள்ளவும். (76473)

## பணிப்பெண் தேவை

கொழும்பில் உள்ள வீடு ஒன்றில் பணிபுரிய சமையல் வேலை, வீட்டு வேலை தெரிந்த பணிப் பெண் தேவை. 40 வயதுக்கு மேற்பட்ட குடும்பப் பொறுப்புகளற்ற பெண் விரும்பத்தக்கது. தொடர்பு: ச சூரிய குமார், பங்களா ஒழுங்கை, மல்லாகம். (76476)

## மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 28 வயது கேட்டை நட்சத்திரம் 8 இல் செவ்வாய்க்குற்றமுள்ள இறுதி ஆண்டில் பயிற்சி பெறும் அழகிய ஆசிரியைக்கு அரச உத்தியோகத்தர், பட்டதாரி, பயிற்றப்பட்ட ஆசிரியராகப் பணிபுரியும் மணமகன் தேவை. தகுந்த சீதனம் வழங்கப்படும். விள. இல. 1058, மே/பா. உதயன், யாழ்ப்பாணம். (76377)

## இறைச்சிக் கோழிகள்

சேவல், கல்பேட், விறாத்துக்குஞ்சுகள் விற்பனைக்குண்டு. சுத்தம் செய்தல் இலவசம். 31, மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில், சுன்னாகம் (கண்ணா வீடியோ சென்ரர் வளவு) (76161)

# தேடுகின்றோம்

நாவற்குழி, கைதடியைச் சேர்ந்த

**ஐ. இராஜேந்திரம், ஞானாம்பிகை**

ஆகியோரைத் தேடுகின்றோம். கீழ்க்காணும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

க. கிருபாகரன்
73, மணல்தரை ஒழுங்கை,
சிவன் கோயில் அருகில்,
திருநெல்வேலி தெற்கு.

(76489)

# இணுவில் லயன்ஸ்கழகத்தின்

ஓகஸ்ட் 2000 க. பொ. த (உயர்தர) மாணவர்களுக்கான

## இலவசக் கருத்தரங்கு

பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் உதவியுடன் நடத்தப்படுகிறது

இடம்: இணுவில் மத்திய கல்லூரி.
காலம்: 16—07—2000 ஞாயிற்றுக்கிழமை
காலை 9.00 மணி (S. L. T.)

| | | |
|---|---|---|
| 16—07—2000 | வர்த்தகம் | கலை |
| 9.00—10.30 | வணிகக்கல்வி | இந்துநாகரிகம் |
| 10.30—12.00 | கணக்கீடு | தமிழ் |
| 12.00—2.00 | பொருளியல் | பொருளியல் |

அனைத்து மாணவர்களையும் பங்குகொண்டு பயன்பெற வேண்டுகின்றோம்.

விளம்பர உதவி:
ATC கல்வி நிலையம், இணுவில்

(76472)

# 9 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு
1914—07—22

இறப்பு
1991—07—15

## அமரர் அல்பிறட் பிரான்சிஸ் ராசு
(Retired P. W. D. Store Keeper)

ஆண்டுகள் ஒன்பது ஓடி மறைந்தாலும்
உங்கள் நினைவுகள் எம் நெஞ்சத்தை விட்டு
நீங்காது!

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

222, குருசோல் வீதி,
சுண்டுக்குளி.

(76391)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது காரியாலயத்தில்
தொழில் நுட்ப உத்தியோகத்தராகக்
கடமையாற்றும்

## லயன் கு. ரகு J. P.

அவர்கள் 03-07-2000 அன்று யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்ற நீதிபதி கௌரவ பா. சுப்பிரமணியம் முன்னிலையில் சமாதான நீதிவானாகச்சத்தியப் பிரமாணம் செய்து கொண்டதைப் பாராட்டுவதுடன் அவரது சேவை தொடர வாழ்த்துகின்றோம்.

சக உத்தியோகத்தர்கள்,
நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகம்,
வீதி அபிவிருத்தி அதிகார சபை,
யாழ்ப்பாணம்.

(76463)

# அந்தியேட்டி அழைப்பு

திருமதி

## சிதம்பரப்பிள்ளை நாகமுத்து

அன்னை மடியில் 14 - 04 - 1914 . அரன் திருவடியில் 15 - 06 - 2000

மந்துவிலைப் பிறப்பிடமாகவும் மீசாலை வடக்கைச் சிலகாலம் வதிவிடமாகக் கொண்டவருமான எமது அன்புத் தெய்வமான அன்னையின் மறைவுச் செய்தியை அறிந்து துயரில் பங்குகொண்ட அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

இன்று(15 07 2000) சனிக்கிழமை மந்துவில் இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியக் கிரியைகளிலும் மதியபோசனத்திலும் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மக்கள்.

மந்துவில்,
கொடிகாமம்.

(76213)

# 7ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
05 — 02 — 1956



உதிர்வு
02 — 07 — 1993

## திருமதி சி. இந்துமதி

திதி: 15 - 07 - 2000

பாசம் நிறைந்தவளே!
பண்புடன் வாழ்ந்தவளே!
நேசம் நிறைந்தவளே!
என் இதமான (தனம்) இந்து
பற்றிப் பிணைந்த கரம்
நித்தம் எமைச் சுற்றும்
உன் அன்பான அந்த முகம்
இந்த என்றும் நாம் மறப்போம்!
உன் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்

அம்மா, அக்காமார்,
அத்தான்மார், பெறாமகன்,
உறவினர்.

சுதுமலை மேற்கு,
மானிப்பாய்.

(76455)

# யாழ். பல்கலைக்கழகத்தில் ஆளணியை அதிகரிக்க அனுமதி

யாழ். பல்கலைக்கழகத்தில் பல்வேறு தரங்களிலுள்ள வெற்றிடங்களுக்கு ஆள்களை நியமிக்க வசதியாக ஆளணி எண்ணிக்கை (CADRE) மேலும் நூறாக உயர்த்தப்பட்டுள்ளது.

பல்கலைக்கழகத்தில் பேராசிரியர்கள், விரிவுரையாளர் மற்றும் ஊழியர்கள் தரத்திலுள்ள வெற்றிடங்களை நிரப்ப ஆளணி எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும் என்று துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவைக் கேட்டிருந்தார்.

ஆளணி எண்ணிக்கையை (CADRE) அதிகரிக்க அனுமதி வழங்கிய பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு இதற்கான நிதியையும் வழங்க திறைசேரிக்குப் பணிப்புரையை விடுத்துள்ளது. (ஐ-3)

## பொது சன உதவிப் பணம்

பளைப் பிரதேச செயலர் பிரிவில் இருந்து இடம்பெயர்ந்து தற்போது வலிகாமம் பகுதியில் வசிக்கும் பொதுசன உதவிப் பணம் பெறுபவர்கள தமது ஜுலை மாதக் கொடுப்பனவை எதிர்வரும் 19ஆம் திகதி புதன்கிழமை மானிப்பாய் தபாலகத்தில் பெற்றுக் கொள்ளலாம் என பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (இ-க)

NOTICE

UNIVERSITY OF JAFFNA, SRI LANKA.

FACULTY OF MEDICINE

**COMMENCEMENT OF LECTURES**

The lectures will commence on **04th September 2000** instead of 2nd October 2000.

*Registrar*

2000.07.07 (C/12220)

# கண்ணீர் அஞ்சலி



## சோமசுந்தரம் சஞ்சீவன்

(கணிதப் பிரிவு 2001 மாணவன், யாழ். இந்துக்கல்லூரி)

நிலை கெட்ட மாந்தரின் நெறிகெட்ட செய்கையால் தன் உயிரை ஈந்துவிட்ட எம் ஆருயிர் நண்பனுக்கு எமது கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குவதுடன், அவரை இழந்து பரிதவிக்கும் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

**ஆருயிர் நண்பனை இழந்து தவிக்கும் சக மாணவர்கள்.** /4

# மரண அறிவித்தல்கள்

## செல்வன் சோமசுந்தரம் சஞ்சீவன்

(உயர்தர வகுப்பு கணிதப் பிரிவு மாணவன், யாழ். இந்துக் கல்லூரி)

செல்வன் சோமசுந்தரம் சஞ்சீவன் 13-07-2000 அன்று அகால மரணமடைந்தார்.

இவர் சோமசுந்தரம் - ராஜினி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற ரஜீவன், நிலானி(வேம்படி மகளிர் கல்லூரி), டிலானி(சுண்டிக்குளி மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

*முருகமூர்த்தி வீதி,*
*வண்ணார்பண்ணை,*
*யாழ்ப்பாணம்.*

(C/12226)

தகவல்:
**க. சோமசுந்தரம்**
(தந்தை)

திருமதி

## மாணிக்கரெத்தினம் வைத்திலிங்கம்

சிவப்பிரகாசம்றோட், ஐயனார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மாணிக்கரெத்தினம் வைத்திலிங்கம் 08-07-2000 சனிக்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நவரெத்தினம்-இரத்தினம்மாவின் அன்பு மகளும், தலையாழியைச் சேர்ந்த காலஞ்சென்ற வைத்திலிங்கத்தின்(Draftsman, Singapore) அன்பு மனைவியும், காலஞ்சென்ற மயில் வாகனத்தின் (ரு.ஆ.உ.) சகோதரியும், மித்திரசேனன்(லண்டன்), ராதா கிருஷ்ணன் (ஜேர்மனி), ஆதிதேவி(கொழும்பு) ஆகியோரின் அன்புத் தாயாரும், மலர்(ஜேர்மனி), காலஞ்சென்ற இரவீந்திரநாத்(பாரேன்) அவர்களின் மாமியாரும், சாயிபிரகாஷ்(லண்டன்), திருமதி ஜெயசங்கரி, இரவீந்திரபாபு(பாரேன்), ஜெயநிஷாகரி(கொழும்பு), சிசாந்(கொழும்பு), உருத்திரஜித்(ஜேர்மனி), பிரஸ்மஜித்(ஜேர்மனி), சத்யஜீத்(ஜேர்மனி), ரவீந்திரபாபு(பாரேன்), தர்மிலா(ஜேர்மனி) ஆகியோரின் பேர்த்தியும், ருபாஷினியின் (ஜேர்மனி) பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கொழும்பில் நடைபெற்றன. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகிறோம்.

தகவல்:
**திருமதி ஆதிதேவி இரவீந்திரநாத்**
(மகள்)

*22 3/4, Moor Road,*
*வெள்ளவத்தை,*
*கொழும்பு.*
T.P.- 01-506631

(76411)

# வெளி மாவட்டங்களுக்குச் செல்ல பயண அனுமதி பெற்றோர் விவரம்.

யாழ். குடாநாட்டில் [illegible]ந்து வெளி மாவட்டங்களுக்குப் [illegible] ணம் செய்யப் பாதுகாப்பு [illegible] மதி வழங்கப்பட்டவர்களின் (இம்மாதம் 14ஆம் திகதி வரை) பதிவு இலக்கங்கள் பிரதேச செயலர் ரீதியாக வருமாறு:-

### சங்கானை

| | |
|---|---|
| 513/143821/A | 513/143821/B |
| 513/143978/A | |

### சாவகச்சேரி

| | |
|---|---|
| 511/149003/A | 511/149003/B |

### நெடுந்தீவு

| | |
|---|---|
| SLN/13351/A | SLN/13351B |
| SLN/13351/C | SLN/13351/D |
| SLN/13351/E | SLN/13367/A |
| SLN/13385/A | SLN/13439/A |
| SLN/13439/B | SLN/13439/C |

### யாழ்ப்பாணம்

| | |
|---|---|
| 511/1450611/A | 512/140631/A |
| 512/140631/B | 512/144344/A |
| 512/144344/B | 512/144344/C |
| 512/144344/D | 512/144344/E |
| 512/144373/A | 512/144373/B |
| 512/144381/A | 512/144387/A |
| 512/144402/A | 512/144503/A |
| 512/144503/B | 512/144540/A |
| 512/144540/B | 512/144540/C |
| 512/144540/D | 512/144579/A |
| 512/144579/B | 512/144700/A |
| 512/144700/B | 512/144732/A |
| 512/144732/B | 512/144732/C |
| 512/144735/A | 512/144984/A |
| 512/144984/B | 512/144984/C |
| 512/148040/A | 512/148040/B |
| 512/148040/C | 512/148040/D |
| 512/148040/E | 512/148040/F |
| 512/148084/A | 512/148134/A |
| 512/148134/B | 512/149243/A |
| 512/149243/B | 512/149243/C |
| 512/149243/D | 512/152612/A |
| 512/152612/B | 512/152612/C |
| 512/152612/D | 512/152612/E |
| 512/152612/F | 512/152632/A |
| 512/152632/B | 512/152642/A |
| 512/152647/A | 512/152647/B |
| 512/152647/C | 512/152655/A |
| 512/152655/B | 512/152728/A |
| 512/152728/B | |

### ஊர்காவற்றுறை

| | |
|---|---|
| SLN/13094/A | SLN/13094/B |
| SLN/13094/C | SLN/13094/D |
| SLN/13094/E | SLN/13262/A |
| SLN/13262/B | SLN/13308/A |
| SLN/13317/A | SLN/13317/B |
| SLN/13317/C | SLN/13317/D |
| SLN/13341/A | SLN/13345/A |
| SLN/13345/B | SLN/13345/C |
| SLN/13345/D | SLN/13346/A |
| SLN/13346/B | SLN/13361/A |
| SLN/13364/A | SLN/13364/B |
| SLN/13364/C | SLN/13369/A |
| SLN/13369/B | SLN/13375/A |
| SLN/13381/A | SLN/13381/B |
| SLN/13381/C | SLN/13381/D |
| SLN/13382/A | SLN/13382/B |
| SLN/13387/A | SLN/13387/B |
| SLN/13388/A | SLN/13395/A |
| SLN/13398/A | SLN/13398/B |
| SLN/13398/C | SLN/13398/D |
| SLN/13398/E | SLN/13398/F |
| SLN/13401/A | SLN/13401/B |
| SLN/13401/C | SLN/13404/A |
| SLN/13404/B | SLN/13409/A |
| SLN/13409/B | SLN/13409/C |
| SLN/13443/A | SLN/13443/B |

### கோப்பாய்

| | |
|---|---|
| 511/133191/A | 511/133191/B |
| 511/143388/A | 511/143388/B |
| 511/145210/A | 511/145210/B |
| 511/145216/A | 511/145232/A |
| 511/149000/A | 511/149000/B |
| 512/152576/A | |

### நல்லூர்

| | |
|---|---|
| 511/136853/A | 511/140980/A |
| 511/141004/A | 511/141154/A |
| 511/141163/A | 511/145191/A |
| 511/145192/A | 511/145192/B |
| 511/145192/C | 511/145192/D |
| 511/145303/A | 511/145304/A |
| 511/145315/A | 511/145316/A |
| 511/145652/A | 511/145705/A |
| 511/148110/A | 512/144300/A |
| 512/144300/B | 512/144393/A |
| 512/144393/B | 512/144393/C |
| 512/144676/A | 512/144676/B |
| 512/148197/A | 512/148197/B |
| 512/148197/C | 513/143790/A |
| 513/143790/B | 513/143929/A |

### சண்டிலிப்பாய்

| | |
|---|---|
| 513/139721/A | 513/139721/B |
| 513/143847/A | 513/143847/B |
| 513/143956/A | 513/143956/B |
| 513/143956/C | 513/144193/A |
| 513/144193/B | 513/144193/C |
| 513/144193/D | 513/146346/A |
| 513/146346/B | 513/146426/A |

### தெல்லிப்பழை

| | |
|---|---|
| 513/139633/A | 513/139633/B |

### உடுவில்

| | |
|---|---|
| 511/145162/A | 511/145162/B |
| 511/145162/C | 511/145162/D |
| 511/145162/E | 511/145231/A |
| 511/145276/A | 511/145299/A |
| 511/145300/A | 513/121589/A |
| 513/121589/B | 513/144057/A |
| 513/144057/B | 513/144057/C |
| 513/152563/A | 513/152563/B |

### வேலணை

| | |
|---|---|
| SLN/13222/A | SLN/13222/B |
| SLN/13300/A | SLN/13321/A |
| SLN/13334/A | SLN/13336/A |
| SLN/13336/B | SLN/13338/A |
| SLN/13348/A | SLN/13349/A |
| SLN/13349/B | SLN/13350/A |
| SLN/13350/B | SLN/13350/C |
| SLN/13352/A | SLN/13356/A |
| SLN/13360/A | SLN/13362/A |
| SLN/13363/A | SLN/13363/B |
| SLN/13373/A | SLN/13373/B |
| SLN/13373/C | SLN/13374/A |
| SLN/13379/A | SLN/13379/B |
| SLN/13379/C | SLN/13383/A |
| SLN/13383/B | SLN/13391/A |
| SLN/13391/B | SLN/13394/A |
| SLN/13394/B | SLN/13396/A |
| SLN/13397/A | SLN/13397/B |
| SLN/13397/C | SLN/13399/A |
| SLN/13399/B | SLN/13399/C |
| SLN/13400/A | SLN/13400/B |
| SLN/13400/C | SLN/13400/D |
| SLN/13408/A | SLN/13420/A |
| SLN/13421/A | SLN/13422/A |
| SLN/13422/B | SLN/13422/C |
| SLN/13431/A | SLN/13433/A |

### சங்கானை

| | |
|---|---|
| 513/143806/A | 513/143806/B |
| 513/143806/C | 513/143891/A |
| 513/143891/B | 513/143984/A |
| 513/144029/A | 513/144106/A |
| 513/144109/A | 513/144148/A |
| 513/144202/A | 513/144202/B |
| 513/144202/C | 513/152505/A |
| 513/152536/A | 513/152553/A |
| 513/152553/B | 513/152567/A |
| 513/152567/B | 513/152567/C |

### யாழ்ப்பாணம்

| | |
|---|---|
| 512/137125/A | 512/140589/A |
| 512/144416/A | 512/144430/A |
| 512/144473/A | 512/144473/B |
| 512/144473/C | 512/144495/A |
| 512/144502/A | 512/144502/B |
| 512/144511/A | 512/144511/B |
| 512/144511/C | 512/144514/A |
| 512/144514/B | 512/144514/C |
| 512/144514/D | 512/144525/A |
| 512/144532/A | 512/144608/A |
| 512/144627/A | 512/144627/B |
| 512/144627/C | 512/144627/D |
| 512/144627/E | 512/144645/A |
| 512/144645/B | 512/144649/A |
| 512/144649/B | 512/144649/C |
| 512/144649/D | 512/144659/A |
| 512/144659/B | 512/144690/A |
| 512/144696/A | 512/144696/B |
| 512/144699/A | 512/144717/A |
| 512/144717/B | 512/144717/C |
| 512/144717/D | 512/144717/E |
| 512/147816/A | 512/147816/B |
| 512/147907/A | 512/147969/A |
| 512/148062/A | 512/148062/B |
| 512/148062/C | 512/148062/D |
| 512/148194/A | 512/149902/A |
| 512/152620/A | 512/152634/A |
| 512/152634/B | 512/152635/A |
| 512/152635/B | 512/152854/A |
| 512/152940/A | 512/152940/B |
| 512/152953/A | 512/152973/A |
| 512/153023/A | |

### கோப்பாய்

| | |
|---|---|
| 512/144628/A | 512/144684/A |
| 512/144684/B | |

### நல்லூர்

| | |
|---|---|
| 512/144527/A | 512/144527/B |
| 512/144530/A | 512/144530/B |
| 512/144569/A | 512/144569/B |
| 512/144569/C | 512/144572/A |
| 512/144572/B | 512/147944/A |
| 512/148202/A | 512/149236/A |
| 512/149236/B | 512/149236/C |
| 512/149236/D | 512/149236/E |
| 512/152569/A | 512/152569/B |
| 512/152569/C | 512/152569/D |
| 512/152675/A | 512/152675/B |
| 512/152683/A | 512/152683/B |
| 512/152683/C | 512/152740/A |
| 512/152740/B | 512/152740/C |
| 512/152740/D | 512/152740/E |
| 513/141206/A | 513/141206/B |
| 513/141206/C | 513/141206/D |
| 513/143826/A | 513/143826/B |
| 513/143826/C | 513/143864/A |
| 513/143864/B | 513/143864/C |
| 513/143864/D | 513/143895/A |
| 513/143895/B | 513/144082/A |
| 513/144084/A | 513/144084/B |
| 513/144084/C | 513/144219/A |
| 513/144220/A | 513/144220/B |
| 513/147024/A | 513/152537/A |
| 513/152537/B | 513/152537/C |
| 513/152546/A | |

### சண்டிலிப்பாய்

| | |
|---|---|
| 513/121864/A | 513/121864/B |
| 513/143828/A | 513/143863/A |
| 513/143932/A | 513/143953/A |
| 513/143953/B | 513/143953/C |
| 513/144126/A | 513/144126/B |
| 513/146286/A | 513/146313/A |
| 513/146313/B | 513/146313/C |
| 513/146375/A | 513/147238/A |
| 513/147238/B | 513/148228/A |
| 513/148228/B | 513/148240/A |
| 513/152510/A | |

### தெல்லிப்பழை

| | |
|---|---|
| 513/146320/A | 513/146320/B |
| 513/148231/A | 513/152524/A |
| 513/152524/B | 513/152524/C |
| 513/152525/A | 513/152534/A |
| 513/152534/B | 513/152534/C |
| 513/152534/D | |

### உடுவில்

| | |
|---|---|
| 513/141897/A | 513/141897/B |
| 513/143788/A | 513/143788/B |
| 513/143963/A | 513/143963/B |
| 513/143963/C | 513/144176/A |
| 513/144176/B | 513/146336/A |
| 513/146388/A | 513/146389/A |
| 513/146390/A | 513/146390/B |

## பல்கலைக்கழக அனுமதி கல்வியாண்டு 2000/2001

கல்வியாண்டு 2000/2001க்குரிய பல்கலைக்கழக அனுமதி பெற்றவர்களின் பெயர்ப்பட்டியல் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அனுமதி பெற்றவர்களின் பெயர்ப் பட்டியலை அனைத்துப் பீடங்களின் அறிவித்தல் பலகைகளில் பார்வையிடலாம்.

பல்கலைக்கழக அனுமதிக்குத் தேவையான ஆவணங்களைச் சமர்ப்பிக்கத் தவறியமையால் முழுமையாகத் தீர்மானிக்கப்படாத அனுமதி பெற்றவர்களின் 41 மாணவர்களின் பெயர்ப்பட்டியலும் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக 41 மாணவர்களும் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவுடன் தொடர்புகொண்டு சமர்ப்பிக்கத் தவறிய ஆவணங்களைச் சமர்ப்பித்துப் பதிவு செய்வதற்கு வேண்டிய அனுமதிக் கடிதத்தைப் பெற்றுப் பதிவை மேற்கொள்ளவும்.

அனுமதிபெற்ற சகல மாணவர்களுக்கும் அனுமதி விண்ணப்பப் படிவம் தனித்தனித் தபாலில் அனுப்பிவைக்கப்படும். பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு ஓகஸ்ட் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்பாக பதிவு செய்யாத மாணவர்களின் பெயர்ப்பட்டியலை அனுப்பிவைக்குமாறு பணித்துள்ளது. எனவே சகல மாணவர்களையும் 2000.08.25 ஆம் திகதிக்கு முன்னதாகப் பதிவினை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

**பதிவாளர்**
13-07-2000

(C/12225)

# முஸ்லிம் காங்கிரஸின் முடிவை மாற்றக் கோருகிறார் ஜனாதிபதி

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் தனித்துப்போட்டியிடுவது என்ற முடிவை மறுபரிசீலனை செய்யுமாறு ஜனாதிபதி ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரசிடம் கோரியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று முன்தினம் தம்மைச் சந்தித்த முஸ்லீம் காங்கிரஸ் செயலாளர் ரவூப் ஹக்கீமிடமே ஜனாதிபதி மேற்கண்டவாறு கோரியுள்ளார்.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியுடன் இணையாது தனித்துப் போட்டியிடுவது என்று ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் கடந்த புதன்கிழமை முடிவு செய்திருந்தது.

அதையடுத்து ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க ரவூப் ஹக்கீமை அழைத்து அவர்களது முடிவை மறுபரிசீலனை செய்யுமாறு கோரியுள்ளார்.

வெளிநாடு சென்றுள்ள தமது தலைவர் எம்.எச்.எம்.அஷ்ரப் நாடு திரும்பிய பின்னர் அது குறித்து முடிவுசெய்வதாக ஹக்கீம் உறுதி அளித்துள்ளார்.

## இனப்பிரச்சினை பேச்சு........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரன், புளொட் சார்பில் அதன் தலைவர் த.சித்தார்த்தன், ரெலோ சார்பில் என்.ஸ்ரீகாந்தா, ஈ.பி.ஆர்.எல்.எவ்.சார்பில் சுரேஷ் பிரேமச்சந்திரன், தமிழ்க் காங்கிரஸ் சார்பில் குமரகுருபரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

விடுதலைப் புலிகளுடன் மாத்திரம் பேச்சு நடத்தினாலேயே பிரச்சினைக்கு நிரந்தரத்தீர்வு காண முடியும் என்று தமிழர் விடுதலைக் கூட்டணியும் தமிழ்க் காங்கிரஸ் கட்சியும் அவரிடம் தெரிவித்தன.

தீர்வுக்கான பேச்சுக்களில் விடுதலைப் புலிகளும் சேர்க்கப்படவேண்டும் என்று ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ். ஆகியன அவரிடம் கோரின.

விடுதலைப் புலிகளையும் பேச்சில் சேர்ப்பதைத் தாம் எதிர்க்கப் போவதில்லை என்று ஈ.பி.டி.பியும், புளொட்டும் தெரிவித்தன.

அரசாங்கம் முன்வைத்துள்ள அரசமைப்புத் திருத்த யோசனைகளை தாம் முற்றாக நிராகரிப்பதாகவும் -

அந்த யோசனைகள் தமிழ் மக்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யவில்லை என்றும் -

தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழ்க்காங்கிரஸ்,ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ். ஆகியன தெரிவித்தன.

அரசமைப்பு யோசனைகளில் உள்ள சில விடயங்கள் ஏற்க முடியாதவை. அவை தொடர்பாக ஐ.தே.கவுடன் பேச்சு நடத்தவிருக்கின்றோம். அதன் மூலம் அந்த விடயங்கள் தமிழ் மக்களின் அபிலாசைகளுக்கு ஏற்ற விதத்தில் மாற்றம் செய்யப்படாவிட்டால் இந்த யோசனைகளை ஏற்கமாட்டோம் என்று ஈ.பி.டி.பியும் புளொட்டும் அவரிடம் தெரிவித்தன.

தமது நாட்டில் பெருமளவில் இலங்கைத் தமிழர் அகதிகளாகத் தஞ்சமடைந்துள்ளதாலும் -

தமது நாட்டு அரசியல்வாதிகள் இலங்கை விவகாரத்தில் பெரும் அக்கறை காட்டுவதாலும் -

இங்குள்ள தற்போதைய நிலையை அறியவே தாம் இலங்கை வந்திருப்பதாகவும் அவர் பதிலளித்தார்.

அதே சமயம் பிரிட்டிஷ் வெளிவிவகார ராஜாங்க அமைச்சர் பீற்றர் வெஸ் மகொட் அரசு, எதிர்க்கட்சித் தலைவர்களையும் சந்தித்தார்.

நேற்றுக் காலை வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரைச் சந்தித்த அவர் இலங்கை அரசின் நிலைப்பாட்டை கேட்டறிந்தார்.

அதன் பின்னர் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்து அவர்களின் நிலைப்பாடு தொடர்பாக பேச்சு நடத்தினார்.

அதன் பின்னர் தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடிய அவர் முஸ்லிம் காங்கிரஸ் பிரதிநிதிகளுடனும் பேச்சு நடத்தினார்.

இன்று அவர் நாடு திரும்புகிறார். (இ-9-3)


### மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு

HERO HONDA - 4000 கி.மீ. மாத்திரம். சிறந்த நிலை, நன்கு பராமரிக்கப்பட்டது. முதல் உரிமையாளர்.

ஊறணி,
வல்வெட்டித்துறை. (76458) இ. தேவகுரு

சுதுமலை
அருள்மிகு ஈஞ்சடி ஞான வைரவர் தேவஸ்தானம்

### இரதோற்சவம்

16-07-2000 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு வசந்தமண்டபப் பூசையும்
தொடர்ந்து 12 மணிக்குதேர்ப் பவனியும் இடம்பெறும்.

### தீர்த்தோற்சவம்

17-07-2000 திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு தீர்த்தோற்சவம் இடம்பெறும்.

சுதுமலை. (C/12204) - பரிபாலன சபை

யாழ். மாவட்ட
கூட்டுறவு கிராமிய வங்கிகளின் சமாசம்

### அறிவித்தல்

#### வருடாந்த பொதுச் சபைக் கூட்டம்

எமது 11-06-2000, 05-07-2000 மற்றும் 06-07-2000 ஆம் திகதிய அறிவித்தல்களுக்கமைய இச்சமாசத்தின் வருடாந்தப் பொதுச் சபைக் கூட்டம் இன்று 15-07-2000 சனிக்கிழமை காலை 10 மணிக்கு இலக்கம் 75, கோயில் வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள சமாசப் பணிமனையில் நடைபெறும் என்பதை சகல அங்கத்துவ சங்கங்களுக்கும் அவற்றின் பிரதிநிதிகளுக்கும் இத்தால் அறியத்தரப்படுகிறது.

சி. வி. கந்தையா சிவஞானம்
தலைவர்.

எஸ். சிவபாலசுப்பிரமணியம்
செயலாளர்.

75, கோயில் வீதி,
யாழ்ப்பாணம்.
14-07-2000 (C/12216)


## ஒன்று கூடல்

யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த தனியார் தொலைபேசிப் பாவனையாளர்கள் தற்போது எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து ஆராய்வதற்கான ஒன்றுகூடல் நாளை பிற்பகல் 3 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக புவியியல் துறை மண்டபத்தில் நடைபெறும். (இ-8)

## ஒத்திவைப்பு

யாழ்.இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம் மாதாந்தம் நடத்தும் முழு நிலா நாள் கருத்தரங்கு தவிர்க்க முடியாத காரணங்களால் இம்முறை ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகச் சங்கம் அறிவித்துள்ளது.

"எய்ட்ஸ் பரம்பலும் அதன் முக்கியத்துவமும்"என்ற தலைப்பில் யாழ்.மாநகர சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் இ.தெய்வேந்திரன் நாளை நடைபெறவிருந்த முழுநிலாநாள் கருத்தரங்கில் கருத்துரை வழங்கவிருந்தார்.

இம்முறை கருத்தரங்கு நடைபெறமாட்டாது என்பதால் அடுத்த மாதத்துக்குரிய முழுநிலா நாள் கருத்தரங்கில் டாக்டர் இ.தெய்வேந்திரனின் உரை இடம்பெறும். (உ)

## இனப்பிரச்சினை......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாம் சமாதானப் பேச்சுக்குச் செல்ல தயாராக இருக்கின்றோம். இதையே இந்தியாவும் ஏனைய நாடுகளும் விரும்புகின்றன.

காலத்தைத் தாழ்த்தும் வகையில் தாமதமாகச் செயற்படும் நோர்வேயுக்கு பெருமளவு செல்வாக்கு இல்லை என்றே தோன்றுகின்றது - என்றார்.

சமாதான முயற்சிகளில் பங்கேற்க விடுதலைப் புலிகள் ஏன் தயக்கம் காட்டுகிறார்கள்? என்று கேட்டதற்கு பதிலளித்து முனசிங்க கூறியதாவது:-

விடுதலைப் புலிகள் தவிர்ந்த ஏனைய சகல கட்சிகளும் சமாதான முயற்சிக்குத் தயாராகவே இருக்கின்றன. ஜனநாயக நடவடிக்கைகளை புலிகள் ஒருபோதும் ஆதரித்தது இல்லை. உலகம் முழுவதும் அவர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். தொலைநோக்கம் கொண்ட அதிகாரப் பரவலாக்கல் யோசனையை நா[illegible] முன்வைத்துள்ளோம். இத[illegible] இந்தியாவும் உலக நாடுகளும் உணர்ந்துள்ளன.

இந்தத் திட்டத்தை புலிகள் ஏற்காத பட்சத்தில் அது அவர்கள் நலன்களுக்கு எதிராகவே அமையும் - என்றார். (இ-க-3)

## புலிகள்.........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாதமும் இருந்ததாக மிக நம்பிக்கையாகத் தெரியவருகின்றது.

இலங்கை அரசாங்கம் நேர்மையாகவும் நியாயமாகவும் நடந்து கொள்ளுமாயின், விடுதலைப் புலிகளைப் பேச்சுக்களில் பங்குபற்றவைப்பதற்கு உதவ முடியுமென்று பிரிட்டிஷ் அரசியல் தலைவர்கள் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் கூறியதாக அறியப்படுகிறது.

இந்த விடயத்தில் இலங்கை அரசு எமக்கு நல்ல சமிக்ஞை தர வேண்டும். அவ்வாறாயின் ராஜதந்திரி ஒருவரை அங்கு அனுப்புவோம் - என்று பிரிட்டிஷ் தலைவர்கள் அப்போது தெரிவித்திருந்தனர்.

அதன் தொடர்ச்சியாகவே அந்நாட்டின் வெளியுறவுத்துறை இராஜாங்க அமைச்சர் பீற்றர் வெஸ் மகொட் கொழும்புக்கு அவசர விஜயம் மேற்கொண்டுள்ளார் எனவும் கொழும்பில் அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

இனப்பிரச்சினையைத் தீர்க்கும் முயற்சியில் இங்கு அரசாங்கம்,எதிர்க்கட்சி,தமிழ்க்கட்சிகள், சிங்களத்தரப்புகளின் நிலைப்பாடுகளை நேரில் அறிந்துகொள்வதே இவரது விஜயத்தின் நோக்கமெனவும் தெரியவந்தது.

தமிழ்க் கட்சிகளுடன் நேற்று நடத்திய சந்திப்பின்போது, பிரிட்டிஷ் இராஜாங்க அமைச்சர் இதனை உறுதி செய்திருந்தார்.

எமது நாட்டு அரசியல் தலைவர்கள் இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தில் பெரும் அக்கறை காட்டுகிறார்கள். அதனால் இங்குள்ள அரசியல் நிலைமையை நேரில் அறிய வந்துள்ளேன் - என்று பிரிட்டிஷ் அமைச்சர் தமிழ்க்கட்சிகளின் தலைவர்களிடம் கூறினார். (அ-3)

## எச்.ஐ.வி தொற்றிய தாய் மூலம் நான்கு பிள்ளைகளுக்கு 'எய்ட்ஸ்'!

### இலங்கையில் வேகமாகப் பரவுகிறது

கொழும்பு,ஜூலை 15

தாய் மூலம் அவரது நான்கு பிள்ளைகளுக்கு எய்ட்ஸ் [illegible] தொற்றியுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என்று சுகாதார அமைச்சின் எய்ட்ஸ் தடுப்புப் பிரிவுப்பணிப்பாளர் திருமதி ஜெயந்தி அபேவிக்கிரம தெரிவித்தார்.

கொழும்பில் நடந்த வைபவம் ஒன்றில்பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"இலங்கையில் எய்ட்ஸ் பரவும் வேகம் அதிகரித்துள்ளது. இந்த வேகத்தில் பரவினால் மேற்கு நாடுகள் போன்ற நிலை இங்கும் ஏற்படும்.

"தற்சமயம் 7ஆயிரத்து 500 பேர் எய்ட்ஸ் நோயால் பீடிக்கப்பட்டுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்தவருடமுடிவுக்கு முன் இந்த எண்ணிக்கை பத்தாயிரத்தைத் தாண்டினால்கூட ஆச்சரியப்படுவதற்கில்லை"- இப்படி அவர் கூறினார். (ஐ-3)

## பஸ் சாரதிகளாக விரைவில் பெண்கள்

மத்திய போக்குவரத்துச்சபையின் பஸ்களில் நடத்துநர்களாகவும், சாரதிகளாகவும் பெண்களை நியமிக்க போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசி நடவடிக்கை எடுத்துள்ளார்.

இந்த நடவடிக்கையின் பேரில் விரைவில் பெண்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படவிருக்கின்றன என்றும்-

பரீட்சார்த்தமாக ஒரு தொகுதியினரை வேலைக்கு அமர்த்துவதென்றும் -

முடிவு செய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

பெண்களை இந்தப்பதவிகளில் அமர்த்துவதன் மூலம் விபத்துக்களைக் குறைப்பதுடன் பயணிகளைக் கௌரவமாக நடத்தவும் வழி ஏற்படும் என்று சுட்டிக் காட்டப்படுகின்றது. (ஐ-3)

## கப்பலில் வந்த கொள்கலனில் நவீன ரகத் துப்பாக்கிகள்!

### முஸ்லீம் பெண்ணின் பெயருக்கு வந்தனவாம்

கொழும்பு,ஜூலை15

கொழும்புத் துறைமுகத்தில் வைக்கப்பட்டிருந்த கொள்கலன் ஒன்றில் இருந்து தொலைநோக்கி பொருத்தப்பட்ட நவீன ரகத்தைச் சேர்ந்த பத்துத் துப்பாக்கிகள் சுங்கப்பகுதியினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

ஹம்பாந்தோட்டை, தங்காலையைச் சேர்ந்த முஸ்லிம் பெண் ஒருவரின் பெயருக்கு துபாயிலிருந்து அனுப்பப்பட்ட கொள்கலனில் இருந்தே இந்த துப்பாக்கிகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்த நவீனரகத் துப்பாக்கிகள் இந்தப் பெண்ணுக்கு ஏன் அனுப்பப்பட்டன என்பது குறித்துப் பொலீஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர் என்று கூறப்பட்டது. (இ-க-3)

## பொதுமக்கள் ஐ.முன்னணியுடன் தினேஸின் கட்சி கூட்டணி

கொழும்பு,ஜூலை15

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் பட்டியலில் மக்கள் ஐக்கிய முன்னணி போட்டியிட விருப்பம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அந்த முன்னணியின் தலைவர் தினேஷ் குணவர்த்தன பொதுமக்கள் ஐக்கிய முன்னணித் தலைவர்களுடன் பேச்சு நடத்தியுள்ளார்.

அதே சமயம்-

ஐ.தே.கவில் இருந்து பிரிந்து சென்று பொதுமக்கள் ஐக்கிய முன்னணியில் இணைத்துள்ள மாற்றுக்குழுவும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் பட்டியலில் போட்டியிட விருப்பம் தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் ஜனாதிபதி தலைமையில் நடந்த பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் நிறைவேற்றுக்குழுக் கூட்டத்தில் பொதுச் செயலாளரும், அமைச்சருமான டி.எம். ஜயரத்தின தலைமையில் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழு வேட்பாளர் பட்டியலை இரு வாரங்களுக்கும் தயாரிக்கும். (3)

## சிகரெட் தட்டுப்பாடு நீங்கும்

காங்கேசன்துறைக்கு வந்து சேர்ந்துள்ள கப்பல் ஒன்றில் பெருமளவில் சிகரெட் எடுத்து வரப்பட்டுள்ளது என்று சிகரெட் விற்பனை முகவர் தெரிவித்துள்ளார்.

பெரும்பாலும் இந்த சிகரெட் இறக்கப்பட்டு நாளை மறுதினம் சந்தைக்கு வந்து விடும் என்றும் -

எனவே கூடுதல் விலைக்குக் கொள்வனவு செய்ய வேண்டாம் என்றும்-அவர் கேட்டுள்ளார்.

## யாழ்.இந்து........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொக்குவில் தலையாழிப் பகுதியில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற சம்பவம் ஒன்றிலேயே இவர் உயிரிழந்தார் என்று கூறப்படுகின்றது.

மரணவிசாரணையின் பொருட்டு சடலம் ஆஸ்பத்திரி சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவத்தை அடுத்து மாணவர் மத்தியில் நேற்று பதற்ற நிலை காணப்பட்டது.

மரணமான பிரஸ்தாப மாணவனுக்கு மூன்று சகோதரங்கள் என்றும் - இவர்களில் ஒருவர் சகோதரர், மற்ற இருவரும் சகோதரிகள் என்றும் - அந்தச் சகோதரரும் இந்திய அமைதிப் படை யாழ்ப்பாணத்தில் நிலை கொண்டிருந்த காலத்தில் அவர்களின் ஷெல்வீச்சில் கொல்லப்பட்டிருந்தார் என்றும் - தெரிவிக்கப்பட்டது. (இ-3-5-8-15-86)

## சிங்கர் கிண்ணம்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னர்.

வெற்றி பெறுவதற்கு 295 ஓட்டங்கள் என்ற இலக்குக்காக போராடிய தென்னாபிரிக்க அணி 50 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுக்களை இழந்து 264 ஓட்டங்களைப் பெற்றது. ஹரி கேர்ஸ்டன் 76 ஓட்டங்களைப் பெற்றார்.

இலங்கை அணியின் பந்து வீச்சில் முத்தையா முரளிதரன் 5 விக்கெட்டுக்களையும் உபுல் சந்தன இரண்டு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

இறுதி ஆட்டத்தின் ஆட்டநாயகனாக இலங்கையின் பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரனும் ஆட்டத்தொடரின் நாயகனாக தென்னாபிரிக்க அணியின் ஜாக் கலிஸும் தெரிவுசெய்யப்பட்டனர். (இ-4)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன்(பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 15-07-2000இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.